கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2033 (சித்ரபானு ஆண்டு) புரட்டாசித் திங்கள்

"ஸ்ரீ கூத்தாடிக் காவிதி சேந்தன் வைப்பித்த இஷபம்"
என்ற கல்வெட்டுள்ள நந்தி. கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

கல்வெட்டு இதழ் : 58 (2002 அக்டோபர்த் திங்கள்) விலை ரூ. 2·00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே . . . . . பக்கம்

1. மணிமேகலை காட்டும் தத்துவஞானம் தழைத்த வஞ்சியின் அமைப்பு

— அர. பூங்குன்றன் 1

2. சிந்தகம்பாடி சிவனீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில்

— ச. செல்வராஜ் 6

3. ஆரணி ஜாகீர்தார்களின் மாளிகை

— து. துளசிராமன் 9

4. பல்லவர் கால முருகனின் சிறப்புத் தோற்றம்

— அர. வசந்தகல்யாணி 11

5. The Palaeolithic Archaeology of the Kortallayar river basin Tamil Nadu

— Shanti Pappu and Kumar Akhilesh .. 16

6. தமிழகம், சீனா பண்டைத் தொடர்புகள்

— ப. சண்முகம் 24

7. Kamudi Fort

— R. Narayanan 32

8. மாசித் திருநாள் என்னும் மாசிமக நீராடல் விழா

— வெ. இராமமூர்த்தி 33

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்கு கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவர்.

க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.
ஆணையர், தொல்லியல் துறை

3-வது குறுக்கு சாலை
தரமணி
சென்னை - 600 113
28 - 1 - 2003

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் காலாண்டிதழான கல்வெட்டு இதழ் : 58, தொடக்கக்காலத்தில் வெளியிடப்பட்டது போல அமைப்பில் சற்று பெரியதாக அமைந்து கட்டுரைகள் அதிகப் பக்கங்களையுடையதாக வெளியிடப்படுகிறது. தமிழ் இலக்கியம், ஊர், கோயில், சிற்பம், கல்வெட்டு, காசு, அரண்மனை, கோட்டை, வரலாற்றுக்கு முற்பட்ட கற்கருவிகள், முதுமக்கட் தாழிகள், பன்னாட்டுத் தொடர்பு முதலியவை குறித்த ஆய்வுகளும் செய்திகளும் இதனில் இடம் பெறுகின்றன.

இத்துறை கருவூரில் ஐந்திற்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டு சங்ககாலக் கட்டடம், கழிவுநீர் பாதை, பானையோடுகள் மற்றும் பல தொல்பொருட்களை வெளிப்படுத்தியுள்ளது. இத்துறை அலுவலர்களும், தொல்லியல் ஆர்வலர் மற்றும் காசியலாரும் பல்வேறு காசுகள், கணையாழிகள், முத்திரைகளை கருவூரில் வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் சங்க காலக் கருவூர்-வஞ்சியின் தெருக்கள், வீடுகள், மாளிகைகள் எவ்விதம் அமைந்திருந்தன என்பதை அறிய தமிழ்க்காவியம் மணிமேகலையில் மட்டுமே செய்திகள் உள்ளன. மேலும் பல்வேறு தத்துவக் கருத்துக்களையுடைய தத்துவவாதிகளும் கருவூரில் நிறைந்திருந் தனர் என்பதையும் மணிமேகலை காட்டுகிறது. இதனை முதற் கட்டுரை விளக்குகிறது.

காடுகளும், மலைகளும் நிறைந்த தருமபுரிப் பகுதியில், ஊர்ச் சிறு தெய்வ வழிபாடும், நடுகல் வழிபாடுமே மிகுதி. ஆகம அடிப்படையில் அமைந்த பெருந் தெய்வக் கோயில்கள் குறைவு. இம்மாவட்டம் சிந்தகப்பாடியில் அமைந்த சிவன் கோயிலின் அமைப்பு மற்றும் கல்வெட்டுச் செய்திகளைச் சுருக்கமாக ஒரு கட்டுரை குறிப்பிடுகிறது. இதுபோலவே வேலூர் மாவட்டம் பார்சன பள்ளியில் பாறைச் சிற்பங்கள் சிறு தெய்வங்களாக வழிபடப்படுவதை ஒரு பெட்டிச் செய்தி குறிப்பிடுகிறது. தொண்டை மண்டலத்தில் பல்லவர் காலத்தில் முருகனது சிற்ப அமைதி தனித்து விளங்கியமையை மற்றொரு கட்டுரை விளக்குகிறது.

நடுவில் நாட்டில் மூதேவியான ஜேஷ்டைக்கு வழிபாடு இருந்ததோடு ஒரு தனிக்கோயில் அமைக்கப்பட்டிருந்தமையும், அது இன்று காளி கோயிலாக அமைந்துள்ளதையும் ஒரு பெட்டிச் செய்தி சொல்கிறது. பண்டைத் தமிழகத்துக் கோயில்களில் நிகழ்ந்த மாசிமக விழாவினை கல்வெட்டுகள் மற்றும் இலக்கியச் செய்திகள் துணைகொண்டு மற்றொரு கட்டுரை விளக்குகிறது.

பழைய கற்காலக் கற்கருவிகள் காணப்படும் சென்னை - பூண்டியை அடுத்த அத்திரம்பாக்கத்தில் சென்னை சர்மா பண்பாட்டுக் கல்வி மையம் அகழாய்வுகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்கொண்டுள்ளது. தற்பொழுது இவ்வகழாய்வில் தொல்லியல் துறை தொழில் நுட்பப் பணியாளர்களும், மாணவர்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய மற்றும் பிரெஞ்சு நாட்டு வல்லுநர்களின் மேற்பார்வையில் நிகழும் இவ்வகழாய்வு வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல் செய்திகளைச் சேகரிப்பதோடு தொன்மைத் தாவரவியல், தட்பவெட்பவியல், நிலவியல் செய்திகளையும் சேகரித்து வருகிறது. இச்செய்திகள் தொடர்பான ஆங்கிலக் கட்டுரை இவ்விதழில் இடம்பெறுகிறது.

திங்கள்தோறும் இத்துறை ஆணையர் செயலகத்தில் தொல்லியல் வல்லுநர்களைக் கொண்டு திங்கட்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது. அவ்வகையில் அண்மையில் நிகழ்ந்த இந்திய - சீனத் தொடர்பு பற்றிய பொழிவு மற்றொரு கட்டுரையாக இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்துறையின் பாதுகாப்பில் அமைந்த கமுதிக் கோட்டை பற்றியும், தொல்லியல் அலுவலர் கள ஆய்வில் அறிந்த ஆரணி ஜாகீதார் மாளிகை பற்றியும், இலத்தீன் வாசகம் உள்ள ஆங்கிலேயர் காசு பற்றியும் கட்டுரைகளும் செய்திகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. மதுரைத் தொல்லியல் அலுவலர் மற்றும், கல்வெட்டாய்வாளர் அருப்புக்கோட்டை வட்டம் நீராவி கிராமத்தில் அறிந்த கல்வெட்டுடன் கூடிய கி.பி. 10-ஆம் நூற்றாண்டு நந்தியின் சிற்பம் அட்டைப்படமாக அமைந்துள்ளது.

கல்வெட்டிதழ் இத்துறை தொழில் நுட்ப அலுவலர்களது கள ஆய்வுச் செய்திகள் மற்றும் கட்டுரைகளை வெளியிடுவதோடு துறைக்கு வெளியில் உள்ள வல்லுநர்களின் கட்டுரைகளையும், வெளியிட்டு மகிழ்கிறது. கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகத் தொல்லியல் ஆய்வாளர்களின் கட்டுரைகளையும், செய்திகளையும் வரவேற்கிறது.

க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.

மணிமேகலை காட்டும் தத்துவஞானம் தழைத்த வஞ்சியின் அமைப்பு

1

அர. பூங்குன்றன்
உதவி இயக்குநர், மதுரை

வஞ்சியும் கருவூரும் ஒரே ஊரைக் குறிக்கும் பெயர்கள் என்று கொள்ளும் வகையில் இலக்கியச் செய்திகள் அமைந்துள்ளன. அதனால் மணிமேகலை ஆசிரியர் வஞ்சியைப் பற்றிக் குறிக்கும் செய்திகள் இன்றைய கருவூரைக் குறிப்பதாகக் கொள்வதில் தவறில்லை. செங்குட்டுவனின் இளவல் என்று கருதப் பெறும் இளங்கோ அடிகள் கூட சிலம்பில் வஞ்சியைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஆனால் சாத்தனார் வஞ்சியைப் பற்றி மணிமேகலையில் விரிவாகப் பேசியுள்ளார். கந்திற்பாவை வருவதுரைத்த காதையில், மணிமேகலை வஞ்சி செல்வாள் என்றும் அங்குத் தங்கித் தவஞ் செய்யும் பல்வேறு சமயக்குரவர்களை அவள் சந்திப்பாள் என்றும் குறித்துள்ளார்.

பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை
ஆங்கந் நகரத் தறிபொருள் வினாவும்
ஓங்கிய கேள்வி யுயர்ந்தோர் பலரால்
இறைவ னெங்கோ னெவ்வுயி ரனைத்தும்
முறைமையிற் படைத்த முதல்வனென் போர்களும்
தன்னுரு வில்லோன் பிறவுருப் படைப்போன்
அன்னோ னிறைவ னாகுமென் போர்களும்
துன்ப நோன்பித் தொடர்ப்பா டறுத்தாங்கு
இன்ப வுலகுச்சி யிருத்துமென் போர்களும்
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லாம்
அல்லியங் கோதை கேட்குறு மந்நாள்

(21. 91-102)

இந்தக் கூற்றின்படி மணிமேகலை வஞ்சிமாநகர்க்குச் சென்று கண்ணகிக் கோட்டமடைந்து கண்ணகியிடம் வேண்டுவது பற்றி வஞ்சி மாநகர் புக்க காதையில் பேசப் பெறுகின்றது. கண்ணகி பழம் வரலாற்றினையும், தனக்கும் கோவலனுக்கும் நேர்ந்த துன்பம் கோவலன் முற்பிறப்பில் செய்த தீவினையால் வந்தது என்ற செய்தியையும் கூறுகிறாள். மேலும் மணிமேகலை வஞ்சியில் வாழும் பல்வேறு சமயக்குரவர்களைக் கண்டு அவரவர் சமயக் கருத்துக்களைக் கேட்பாள் என்றும் கூறுகிறாள். சமயக்கணக்கர்

தந்திறம் கேட்டபின் அந்தச் சமயங்கள் கூறும் வழி தவறு என்பதை உணர்ந்தபின் புத்த நெறியை அறிந்து அதனைத் தழுவுவாய் என்றும் கூறுகிறாள். சமயக்கணக்கர்கள் மணிமேகலையை இளையவள் என்று கருதி சமயக் கோட்பாடுகளைக் கூற மாட்டார்கள் என்றும் அதனால் ஆண் முனிவன் வேடமிட்டு அங்குச் செல்லுதல் நன்று என்றும் கூறுகிறாள்.

மையறு சிறப்பிற் றெய்வதந் தந்த
மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்த்
தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கையிற்
செங்குட்டுவன் . . . . .

(26 : 70 - 77)

என்று கூறப்பெறும் வரிகள் வஞ்சியில் பல்வேறு சமயவாதிகள் தங்கித் தவமியற்றிய செய்தியைச் சுட்டுகின்றன.

பண்டை நாளில் தமிழக நகரங்கள் பதினெட்டு மொழி பேசும் மக்கள் வாழுமிடங்களாக விளங்கின. அம்மக்கள் பல்வேறு சமயங்களைப் பின்பற்றினர். அதனால் அச்சமயங்களையும், சமயக்கோட்பாடுகளையும் பரப்பும் சமயவாதிகள் இந்நகரங்களில் வாழ்ந்தனர். இந்த நிலை இந்தியா முழுவதும் நிலை பெற்றிருந்தது. வடக்கும் தெற்கும் சந்திக்கும் உஞ்சை நகரத்தில் அறுவகை சமயங்கள் தழைத்திருந்ததைப் பற்றிப் பேசப் பெறுகின்றது. மேகலையிலும் அறுவகைச் சமயம் பேசப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மணிமேகலை பௌத்த சமயத்தைச் சேர்ந்தவளாகையால் ஐவகைச் சமயங்களைப் பற்றியே விவரமாகப் பேசப்பெறுகின்றது.

மணிமேகலை எழுதப்பட்ட காலத்தில் ஐவகைச் சமயங்களில் கிளை களும் தோன்றிவிட்டன. மணிமேகலை சந்தித்து உரையாடியது, பத்து சமய வாதிகளிடம் என்று சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். (1) அளவை வாதி (வைதிகவாதி) (2) சைவ வாதி (3) பிரம வாதி (4) வைணவ வாதி (5) வேத வாதி (6) ஆசீவக வாதி (7) நிகண்ட வாதி (8) சாங்கிய வாதி (9) வைசேடிக வாதி (10) பூத வாதி ஆகியோர் மணிமேகலையிடம் தம் தம் சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளனர். நீலகேசியில் சமயங்கள் அறுவகைச் சமயங்கள் என்ற எண்ணிக்கையிலேயே அடக்கப்பட்டு விட்டன. சிவஞான சித்தியாரில் அறுவகைச் சமயங்கள் பதினான்காக விரிந்து நிற்பதைக் காணலாம். தத்துவ ஞானங்களில் பல்வேறு கிளைகள் தோன்றிவிட்டதையே இவை சுட்டுகின்றன. மணிமேகலை காலத்தில் பிற நகரங்களைப் போலவே வஞ்சியிலும் தத்துவ ஞானங்கள் தழைத்தன.

தத்துவ ஞானங்களைப் பற்றி ஒரேயிடத்தில் தொகுத்துக் கூறிய பெருமை இந்தியாவிலேயே மணிமேகலை ஆசிரியர் ஒருவருக்கு மட்டுமே. அவருக்கு முன் யாரும் தத்துவ ஞானங்களைத் தொகுத்துக் கூறியதற்கான சான்று ஏதும் கிடைக்கவில்லை. பின்னாளில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மாதவர், இந்தியத் தத்துவ ஞானங்களைத் தொகுத்து கூறினார்.

மணிமேகலை ஆசிரியர் முதன் முதலில் குறிப்பிடுவது அளவை வாதி களைத்தான். அளவை நூல்களை யாத்தவர்களில் வேதவியாசரும், கிருதகோடியும் முதன்முதலில் குறிக்கப் பெறுகின்றனர். சைமினியும் இவர்களுடன் சுட்டப் பெறும் அளவை நூலாசிரியர். அளவைகள் பத்து, எட்டு, ஆறு எனக்கொள்வோர் மூவகை அளவைவாதிகள். அளவைகள் காண்டல், கருதல், உவமை(?)ஆகமம் அருந்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, யொழிவறிவு, உண்டானெறி ஆகியவை. இந்தப் பிரமாணங்களை சுட்டுணர்வு முதலிய எட்டுவகையாகப் பிரிப்பர்.

உலோகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாம்சம் ஆகியவை அறுவகைச் சமயங்கள். இந்த ஆறு வகைச் சமயங் களின் கோட்பாடுகளை உருவாக்கியவர்கள் பற்றியும் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். பிருகஸ்பதி, சினன், கபிலன், அக்கபாதன், கணாதன், சைமினி ஆகியோர் அந்தந்த சமயங்களின் அளவை நூலை வகுத்தவர்கள். மணிமேகலை ஆசிரியர் காலத்தில் ஆறு வகை அளவைகளே ஏற்றுக் கொள்ளப் பெற்றன. அறுவகைச் சமயங்களுள் உலோகாயத்திற்குப் பிரத்தியக்கமொன்று அளவையாகும். பௌத்தத்திற்கு பிரத்தியக்கத்துடன் அனுமானமும் அளவை ஆகும். சாங்கியத்திற்கு இவ்விரண்டு பிரமாணங் களுடன் ஞகமமும் அளவை ஆகும். நையாயிகத்திற்கு அம்மூன்றனோடு உவமானமும் அளவை ஆகும். வைசேடிகத்திற்கு அந்நான்கனுடன் அருத்தா பத்தி அளவையும் ஆகும். மீமாம்சைக்கு அவ்வைந்தனோடு அபாசமும் அளவை ஆகும். அளவை வாதியிடம் கேட்ட பின்பு சைவ வாதி, வைணவ வாதி, வேத வாதி ஆகியோர் கருத்துக்களை மணிமேகலை கேட்கிறாள். இம்மூன்று சமயங்களின் கருத்துகளை சாத்தனார் சுருக்கமாகவே குறிப்பட்டுள்ளார்.

இச்சமய வாதிகளின் திறம் கேட்டு இச்சமயக் கோட்பாடு குறை யுண்டென்று உணர்ந்த பின் ஆசீவக வாதி நிகண்டவாதி (சமணம்), சாங்கியவாதி வைசேடிக வாதி, பூத வாதி ஆகிய சமயத் தலைவர்களிடம் அவர்கள் கோட்பாட்டினைக் கேட்டறிந்தாள். கேட்டறிந்தபின் இந்தக் கோட்பாடுகளின் குறைபாடுகளை அறிந்து கொண்டாள். உலோகாயதத வாதி ஒரு பிறவிக்கு மேல் பிறவி இல்லை என்று கூறிய வாதத்தைக் கேட்டுச் சிரித்தாள். ஏன் சிரிக்கிறாய்? என்று உலோகாயத வாதி கேட்ட போது தான் முற்பிறவியை அறிந்திருப்பதாகப் பதிலுரை தந்தாள். அதனால் உலோகாயத வாதமும் பொய் என்று உணர்ந்தாள். அவள்

பௌத்தத்தைத் தவிர பிற மதங்கள் பொய்யானவை என்று கருதுவதாகக் கூறிச் செல்கிறாள். வஞ்சியின் சமயக் கணக்கர் தம் திறனை கேட்டபின் வஞ்சி மாநகரினுட் சென்று அங்குள்ள கடைவீதிகள், அரச வீதி, அமைச்சர் வீதி ஆகியவற்றைக் கண்டாள்.

வைதீக மார்க்கத்தளவை வாதியைப் பார்த்து அளவையியல் பற்றி விளக்கும்படி கேட்டாள். அளவை வாதி அளவைகள் எத்தனை என்பது பற்றி விளக்கினார். காவிய காலத்து நகரங்களில் தத்துவ ஞானங்கள் பயிலப் பெற்றன. புகாரில் உறுபொருள் சமய வாதிகள் விழாக்காலங்களில் பட்டிமண்டபத்தில் தம் தம் சமயக்கருத்துகளை எடுத்துக்கூறி வாதம் புரிவர் (2: 60-63). அந்த வகையில் மதுரையில் இத்தகைய தத்துவ ஞானிகள் வாழ்ந்திருக்க வாய்ப்புண்டு. சாத்தனார் மதுரைக் கூலவாணிகனாக விளங்கிய போதிலும் மதுரையில் வாழ்ந்த தத்துவ ஞானிகளைப் பற்றி ஏதும் கூறவில்லை. சிந்தாதேவிக் கோட்டம் பற்றிக் கூறியுள்ளார். சாத்தனார் காலத்தில் இந்திய தத்துவ ஞானங்கள் தமிழக நகரங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பெற்றிருந்தன. சாத்தனார் வாழ்ந்த காலத்தில் சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் பெருஞ் செல்வாக்கு பெறவில்லை. பக்தியியக்கமாக மாறவில்லை. அதன் வீச்சு பல்லவர் காலத்தில் தெளிவாகத் தெரிந்தது. சாத்தனார் காலம் இவ்விரு சமயங்களும் நகர வாழ்க்கையில் மலரத் தொடங்கிய காலம். அதனால்தான் இவ்விரு சமயங் களைப் பற்றிச் சுருக்கமாகவே பேசியுள்ளார்.

சாத்தனார் அளவை வாதிகளைக் குறிக்கும் போது இந்திய மரபுவழி நிலையிலிருந்து மாறுபட்டு கூறியுள்ளார். இந்திய மரபில் அறுவகைச் சமயங்கள் என்று கூறப்பெறுவது யோகம், மீமாம்சம், சாங்கியம், வைசேடிகம், நியாயம், லோகாயதம் ஆகியவை. ஆனால் ஒரு சாரார் லோகயத்தத்தை விடுத்து உத்திர மீமாம்சம், பூர்வமீமாம்சம் என்று இரண்டினை தரிசனம் என்று கூறுவர்.

வஞ்சி மாநகரின் உள்பகுதியை விரிவாக வருணிப்பது மணிமேகலையில் மட்டும் தான். சிலப்பதிகாரத்தில் வஞ்சிமாநகர் உள் அமைப்பு விவரிக்கப் பெறவில்லை. பத்துப்பாட்டில் மதுரையும், புகாரும் விரிவாகப் பேசப் பட்டுள்ளன. பட்டினப்பாலையில் புகாரிலிருந்த மாடமாளிகை, கடைவீதி, துறைமுகம், தவப்பள்ளிகள் ஆகியவை விரிவாகப் பேசப் பெறுகின்றன. மதுரைக் காஞ்சியில் மதுரை நகரத்தில் நிலை பெற்றிருந்த கடைவீதி, அரண்மனை, தவப்பள்ளி ஆகியவை விவரிக்கப் பெறுகின்றன. நெடுநல் வாடையில் அரண்மனையின் அமைப்பு பேசப் பெறுகின்றது. ஆனால் வஞ்சி மாநகர் பற்றி பத்துப் பாட்டிலோ, காவியங்களிலோ விவரிக்கப் பெறவில்லை. மணிமேகலையில் மட்டுமே விவரிக்கப் பெறுகின்றது. வஞ்சி மாநகர் புக்க காதையில் வஞ்சியைப் பற்றி விவரிக்காமல் கச்சிமாநகர் புக்க காதையில் விவரித்துள்ளார். இது வியப்பிற்குரியது.

புறஞ்சேரியில் தங்கியிருந்த சமயக்கணக்கர்களிடம் அவரவர் சமயங்களின் கொள்கைகளைக் கேட்டறிந்த பின் வஞ்சி நகரத்திற்குள் மணிமேகலை செல்லும் பொழுது எந்திரவாவி, சிவிறிக்கொம்பு (நீரை வீசும் கருவி) போன்றவற்றைக் கண்டு செல்கிறாள். பௌத்த சமய குடும்பத்தினர் (உபாசகர்) பௌத்த முனிவர்கள் பாதங்களைக் கழுவும் நீர் அகழியில் வந்து விழுகின்றது. பல்வேறு வண்ணங்களில் அமைந்த சுண்ணப் பொடிகள் தண்ணீரில் கலந்து சுருங்கை வழியே வருகின்ற காட்சி (5-17) வருணிக்கப் பெறுகின்றது. வண்ணங்கலந்த நீரும், மலர்ந்த பூக்களும் அகழியை வானவில் போல காட்சி அளிக்க செய்கின்றன. அகழியை அடுத்துக் காவல் மதில்கள் உள்ளன. அகழிக்கு வெளிப்புறத்தில் காவற்காடு உள்ளது. உயர்ந்த வாயில்கள் தோறும் நிலாச்சுதை விளங்குகிறது. கொடிகள் பறக்கும் வாயிலின் வழியே வஞ்சி நகரத்திற்குள் செல்கிறாள் மணிமேகலை.

மாகதர் (இருந்தேத்துவார்) சூதர் (நின்றேத்துவார்) வேதாளிகர் (பல வகைத் தாளத்திலாடுவார்) ஆகியோர் ஒருங்கு வாழும் தெரு அடுத்துள்ளது. அடுத்து பொது மகளிர் வாழும் தெரு உள்ளது. கண்ணும் நுழையாத அளவுக்கு நுண்ணியதாக நெய்த வண்ண வண்ணப் புடவைகளை விற்போர் தெரு அடுத்துள்ளது. பொன்னை உரைத்துத் தரம் காணும் வல்லோர் வாழும் தெரு உள்ளது. பலவகை இரத்தினங்களை விற்போர் வாழும் தெரு அடுத்துள்ளது. அடுத்து மறையோர் வீதி உள்ளது. இராசப் பெருந்தெரு, அமைச்சர் வாழும் வீதி, சேனாதிபதிகள் முதலியோர் வாழும் வீதி ஆகியவை உள்ளன. மன்றம், பொதியில், முச்சந்தி, சதுக்கம் ஆகியவற்றை மணிமேகலை கண்டாள். புதிதாகப் பிடித்து வந்த யானையைப் பழக்குவோர், குதிரையைப் பழக்குவோர் வாழும் தெரு உள்ளது. செங்குன்றுகள், ஆசையை மிகுதிப் படுத்தும் மரச்சோலைகள், தேவரும் விரும்பும் பொய்கைகள் நிறைந் திருந்தன. அறச்சாலைகள், கூடங்கள் பொன்னாலாகிய அம்பலம், சித்திரங்கள் எழுதப் பெற்ற தவப்பள்ளிகள், ஆகியவற்றை மணிமேகலை வஞ்சியில் கண்டாள்.

காஞ்சி நாடு மழையின்றி பஞ்சமடைந்து கவினிழந்தது. காஞ்சி நகரில் மாதவர்க்கு உணவிடும் வளமின்றி நிலை குலைந்தது. அதனால் அறவணவடிகளும் மாதவியும், அதமதியும் வளம்மிக்க வஞ்சி மாநகர்க்கு வந்து தங்கியிருந்தனர். மேற்குத் திசையில் நின்று வடதிசையில் உள்ள காஞ்சி மாநகர்க்கு வான்வழியில் மணிமேகலை சென்றாள். வஞ்சி மாநகர் புகுந்ததிலிருந்து காஞ்சி மாநகர் செல்லும் வரையிலான நிகழ்ச்சிகள் வஞ்சி நகரமைப்பைப் பற்றியதாகவே அமைந்துள்ளன.

கள ஆய்வுகளாலும், அகழாய்வுகளாலும் பல்வேறு தொல்லியல் சான்றுகளைத் தந்து விளங்கும் இன்றைய கரூர், பண்டைய சேரர் தலைநகர் வஞ்சி என்று ஆய்வாளர்கள் கருதும் ஊராகும். அதன் தொன்மை நகரமைப்பு மணிமேகலையில் மட்டும் சொல்லப்பட்டிருப்பதை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

சிந்தகம்பாடி
சிவனீஸ்வரமுடைய நாயனார்
திருக்கோயில்

2

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர்
தருமபுரி

கங்கர், நுளம்பர், சோழர், விசயநகரர், நாயக்கர், ஹைதர், திப்பு என தொடர்ச்சியாக பல அரச வம்சத்தினரும் ஆட்சி புரிந்துள்ள பகுதி தருமபுரிப் பகுதியாகும். சோழர்கள் காலத்தில் முதலாம் இராஜ ராஜன் இப்பகுதியை கைப்பற்றி இதனை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தான். தருமபுரி-கிருஷ்ணகிரி பகுதியை நிகரிழி சோழ மண்டலம் என்றும், ஓசூர் பகுதியை முடி கொண்ட சோழ மண்டலம் என்றும் பெயரிட்டழைத்தான். அவனுக்கு பின்னர் வந்த இராசேந்திரன் காலத்திலும் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்திலும் இப்பகுதியில், பல ஊர்களில் கோயில்கள் கட்டப்பட்டன. இப்பகுதியில் அமைந்த சிந்தகப்பாடி என்ற ஊரின் பெருமை, கோயில் சிறப்பு, சிற்பங்களின் காலம், கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் ஆகியவற்றை இங்கு காண்போம்.

"நிகரிழி சோழ மண்டலத்து கங்க நாட்டு தகடூர் நாட்டுப் புறமலை நாட்டு சிந்தகப்பாடி" என்று கல்வெட்டு குறிப்பிடும் இவ்வூர் தற்பொழுது தருமபுரியில் இருந்து தென்கரை கோட்டை செல்லும் சாலையில் சுமார் 28 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் பெயர் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு முதலே சிந்தகப்பாடி என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குறிய கல்வெட்டு சான்றாக சிந்தகப்பாடி அருகே உள்ள பள்ளிப்பட்டு என்ற கிராமத்தில் காணப்படும் நடுகல் உணர்த்தி நிற்கின்றது.

முல்லை நிலத்திலே தோன்றும் ஊர்கள் பெரும்பாலும் பாடி என்று பெயர் பெறும்.

"புறவம் புறம்பணை புறவணி முல்லை
அந்நிலத்தூர்ப் பெயர் பாடி யென்ப"

— பிங்கல நிகண்டு.

திருத்தொண்டராகிய சண்டேசுவரர் பசுக்களை மேய்த்து ஈசனுக்குப் பூசனை புரிந்த இடம் திரு ஆப்பாடி என்று தேவாரம் கூறுகின்றது.

கண்ணன் பிறந்து வளர்ந்த கோகுலத்தை ஆயர் பாடி என்று தமிழ் நூல்கள் குறிக்கின்றன. வட ஆற்காட்டில் வேல மரங்கள் நிறைந்த காட்டில் எழுந்த காரணத்தால் அது வேலப்பாடி என்று பெயர் பெற்றதென்பர். நாளடைவில் காடு நாடாயிற்று. வேலப்பாடியின் அருகே வேலூர் தோன்றிற்று. இன்று கோட்டை கொத்தளங்களை உடையதால் வேலூர் சிறப்பு பெற்ற போது ஆதியில் தோன்றிய வேலபபாடி அதன் ஒரு அங்கமாய் அமைந்து விட்டது. அது போல சிந்தகம் என்பது புளியைக் குறிப்பது. புளிய மரங்கள் அடர்ந்து அதிக அளவில் காடாக திகழ்ந்ததால் இவ்வூர் சிந்தகப்பாடி என பெயர் பெற்று இருக்கக் கூடும். தருமபுரி மாவட்டத்தில் ஊர் பெயர்கள் இயற்கை வளங்களை அடிப்படையாக கொண்டும், சாதிகளின் அடிப்படை யிலும், அதன் சிறப்பான தொழில் முறைகளின் அடிப்படையிலும் அமைத் துள்ளதை காணலாம். அத்தகைய அமைப்பில் சிந்தகம்பாடி பெயர் பெற்று இருப்பதில் வியப்பில்லை.

கோயில் அமைப்பு

கல்வெட்டுகளில் சிவனீஸ்வரமுடைய நாயனார் கோயில் என்றழைக்கப் படும் இவ்வூர்க் கோயில் ஊரின் மேற்கே அமைந்த திருக்கற்றளி ஆகும். கர்பகிருகம், அர்த்தமண்டபம் என்ற அளவில் அமைந்த இக்கோயிலில் லிங்க உருவில் சிவனீஸ்வரமுடையார் காட்சியளித்துக் கொண்டுள்ளார். அர்த்த மண்டபத்தை ஆறு தூண்கள் அலங்கரிக்கின்றன. விதானத்தில் மீன் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலில் மேற்குப் பகுதியில் கிழக்குப் பார்த்த நிலையில் நந்தியும், நந்தி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. நந்தி சிற்ப அமைப்பை நோக்க அது கி.பி. 12-13ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகத் தோன்றுகிறது. கோயிலின் அதிஷ்டானம் மண் மூடிய நிலையில் இருந்தது. அதனை அகழ்ந்து தூய்மை செய்து பார்த்த பொழுது அங்கு சில கல்வெட்டுகள் இருந்தமை வெளிக் கொணரப்பட்டது.

கல்வெட்டுச் செய்திகள்

சுமார் 14 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் சில தற்பொழுது மிகவும் சிதிலமடைந்துள்ளன. சில நல்ல நிலையில் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள் பல அரிய செய்திகளை நமக்கு தெரிவிக்கின்றன. போசள மன்னர் சோமீஸ்வரன், சோழ மன்னர்கள் மூன்றாம் குலோத் துங்கன், மூன்றாம் இராசராசன், குலோத்துங்க சோழன் காலத்தில் குறுநில மன்னராகத் திகழ்ந்த இராசராச அதியமானார் விடுகாதழகிய பெருமாள் ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன.

கல்வெட்டில் காணப்படும் பிற ஊர்கள் ஸ்ரீகான பள்ளி, மழவராய புத்தேரி, புளியாழ்வார் பற்று, காரிமங்கள சோகத்தூர் ஆகியனவாகும். நாட்டுப் பிரிவுகளாக கங்க நாடு, தகடூர் நாடு, புறமலை நாடு ஆகியவை குறிப்பிடுகின்றன.

போசள மன்னன் சோமீஸ்வரன் காலத்தில் கங்கய தண்ணாக்கன் என்பவன் சிவனீஸ்வரமுடைய நாயனார்க்கு திருநொந்தா விளக்கு எரிப்பதற்கு ஆலமேடு என்ற இடத்தில் விளைச்சலில் ஒரு பங்கை அளித்துள்ளார். இக்கோயில் பூசைக்காக நிலம் அளித்தல், நொந்தா விளக்கு எரித்தல் போன்றவற்றிற்கு தேவதானமாக நிலமளித்த செய்திகளும் உள்ளன.

மேலும் காரிமங்கலத்தைச் சேர்ந்த கொண்டையன் மலையன் என்பவன் சிவனீஸ்வரமுடைய இறைவனுக்கு விளக்கு எரிக்கக் கொடுத்த பொன்னையும், ஏழு சந்தி விளக்குகள் எரிக்கக் கொடுத்த பொன்னையும், 12 பசுக்களையும் இக்கோயிற் காணியுடைய சிவபிராமணன் தில்லை நாயகப் பட்டன் மூவாயிரத்தொறுவன் ஏற்றுக்கொண்டு சந்திரர் சூரியர் உள்ளவரை எரிப்பதாக ஒப்புக்கொண்டதையும் இக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. கல்வெட்டில் காணப்படும் காரிமங்கலம் இன்றும் அதே பெயரில் தருமபுரி - கிருஷ்ணகிரி சாலையில் அமைந்துள்ளது.

சோகத்தூரில் உள்ள சில நிலங்களை பெரியனாயன் என்பவன் சிந்தகப்பாடி சிவனீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு அளித்த குறிப்பும் உள்ளது. கண்டகம் என்ற அளவை ஒன்றையும் இக்கல்வெட்டுக்களில் காணலாம்.

நடுகல் வழிபாடு மிகுந்த தருமபுரிப் பகுதியில் ஆகமக் கோயில்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகும். அவற்றில் ஒன்றாகவும், கற்றளியாகவும் கல்வெட்டுகளுடனும் இக்கோயில் அமைந்துள்ளது ஒரு சிறப்பாகும். ★

மணல்மேடு ஈமத்தாழிகள்

நாகப்பட்டணம் மாவட்டம், சீர்காழிவட்டம் மணல்மேடு கிராமத்தில் மண்தோண்டும் போது முதுமக்கட்தாழிகள் கிடைப்பதாகத் திரு. வி. வைத்யநாதன் தந்த தகவலின் படி அப்பகுதி களஆய்வு செய்யப்பட்டது. $1\frac{1}{2}$ கி.மீ. சுற்றளவில் இப்பகுதியில் 50 க்கும் மேற்பட்ட தாழிகள் புதைந்துள்ளன. ஊர் மக்கள் வெளிப்படுத்திய தாழி 4 அடி உயரமும் $2\frac{1}{2}$ அடி விட்டமும் உடையது. இதனுள் எலும்புத்துண்டுகள், கருப்பு-சிவப்பு மற்றும் கருப்பு நிற மட்கலன்கள், இரும்பாலான குறுவாள். நெடுவாள் ஆகியனவும் கிடைத்துள்ளன. தாழிகள் மூடியுடனும் காணப்படுகின்றன. வீரமறவர்களின் ஈமச் சின்னங் களாகவும், சுமார் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவை யாகவும் இவற்றைக் கருதலாம்.

கோ. முத்துச்சாமி
கல்வெட்டாய்வாளர், பூம்புகார்.

3 ஆரணி ஜாகீர்தார்களின் மாளிகை

து. துளசிராமன்
காப்பாட்சியர்
சென்னை

ஆரணியிலிருந்து சுமார் 18 கி.மீ. தூரத்தில் உள்ள முள்ளன்றம் என்னும் ஊருக்கு பேருந்தில் சென்று, அங்கிருந்து தென்மேற்கு நோக்கி மேடான பாதையில் சுமார் 8 கி.மீ. தூரம் நடத்து சென்றால், பூசி மலைக்குப்பத்தை அடையலாம். அங்கு சுற்றிலும் மலைகள் சூழ்ந்து நிற்கின்ற அழகிய சூழ்நிலையில் அடர்த்தியான மா, பலா, தென்னை போன்ற மரங்களுக் கிடையில் அழகிய மாளிகை ஒன்று அமைந்துள்ளதைக் காணலாம்.

மூங்கில் மலை அடிவாரத்தில் ஆங்கிலேயர் கட்டடக்கலை பாணியில் கி பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த மாளிகை தெற்கு நோக்கிய நிலையில் கவினுற கட்டப்பட்டுள்ளது. இம்மாளிகை கிழக்கு மேற்காக 17·5 மீட்டர் அகலம், தெற்கு வடக்காக 23·75 மீட்டர் நீளமும் கொண்டுள்ளது. மாளிகைக்கு முன் புறத்தில் வாகனங்கள் நிற்பதற்கான கூடமும் (Portico) அதற்கடுத்து ஓய்வெடுப்பதற்கான பெரிய கூடமும், அதற்கு இருபுறமும், பின்புறமும் ஆறு பெரிய அறைகளும் உள்ளன. இவை அனைத்திலும் குளிர் காய்வதற்கான நெருப்பு மாடங்களும், குளியல் அறை களும், கழிப்பறைகளும் உள்ளன. இவ்வறைகளின் கூரைப் பகுதியில் "பங்கா" எனப்படும் விசிறிகள் மாட்டுவதற்குரிய இரும்பாலான கொக்கி களும் உள்ளன. கிழக்குப்புற தாழ்வாரத்தை, அணி செய்யப்பட்ட அழகிய இரும்புத் தூண்கள் தாங்குகின்றன. மேல்த் தளத்திலும் தரைத் தளத்தை போன்றே ஒரு பெரிய கூடமும் ஆறு விசாலமான அறைகளும் உள்ளன. மேல் தளத்திற்கு செல்ல மூன்று இடங்களில் படிகள் உள்ளன. மேல் தளத்திற்கு மேல் சீமை ஓடுகள் வேயப்பட்ட அறைகள் இருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. தற்போது ஓடுகள் அனைத்தும் சிதைந்து விழுந்து விட்டன. இந்த மாளிகையிலுள்ள அறைகளுக்குள் காற்றோட்டத் திற்காக அகலமான ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு தேக்கு மரத்தாலான சட்டங்களும், ஜன்னல் கதவுகளும் பொருத்தப்பட்டிருந்தன. தற்போது பெரும்பாலும் இவை அழித்தொழிந்துவிட்டன. சில ஜன்னல் சட்டங்கள் மட்டும் எஞ்சியுள்ளன. இந்த மாளிகை முழுவதும் செங்கற் களால் கட்டப்பட்டுள்ளது. சுண்ணாம்பும் மணலும் இணைப்பு பொரு ளாகவும் (Binding material) பூச்சுப் பொருளாகவும் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. மாளிகையின் முதற் தளத்தின் உயரமான முகப்புப் பகுதியில் அன்றைய ஆங்கிலேய அரசின் சின்னம் சுதையால் வடிக்கப் பட்டுள்ளது.

இந்த மாளிகையின் வடமேற்குப் பகுதியில் வேலையாட்கள் தங்குவதற்குரிய ஒரு நீண்ட கட்டடம் காணப்படுகிறது. சீமை ஓடுகளால் வேயப்பட்ட இதன் கூரைப்பகுதி தற்போது சிதைந்து போயுள்ளது. மாளிகையின் பின்புறத்தில் புறாக்கள் தங்குவதற்குரிய வட்ட வடிவமான சிறிய கட்டடப்பகுதி ஒன்று உள்ளது. இதன் உள்ளே புறாக்கள் தங்குவதற்கு வசதியாக சிறிய கூடுகள் பல கட்டப்பட்டுள்ளன.

ஆரணிக்கு கிழக்கே ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் கமண்டல நாக நதியின் வடகரையில் உள்ள சத்திய விஜய நகரத்தைத் தலைமையிடமாக கொண்டு ஆரணி ஜாகீர்தார்கள் ஆண்டு வந்தார்கள். ஆங்கிலேயர் காலத்தில் வடக்கே மலைத் தொடர் அமைய கிழக்கே ஆர்க்காடு மற்றும் வந்தவாசி வட்டங்களும், தெற்கேயும் மேற்கேயும் போளூர் வட்டமும் கொண்ட ஏறக்குறைய 211 சதுரமைல் பரப்பிற்கு ஆரணி ஜாகீர் அமைந்திருந்தது.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பீஜப்பூர் அரசரால் வேதஜி பாஸ்கர் பந்த் என்பவருக்கு அவருடைய உண்மையான படைப் பணியைப் பாராட்டி ஆரணி பகுதி நிலையான வெகுமதியாக அளிக்கப்பட்டது. ஏறத்தாழ 157 ஆண்டுகளுக்கு அவரது வழித்தோன்றல்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். இதில் ஒன்பதாவது ஜாகிர்தார் திருமலைராவ் என்பவரின் மூத்த மகன் சீனிவாசராவ் என்பவர் 1871 முதல் ஆரணி ஜாகீர்தாராக பட்டமேற்றார். இவரால் இம்மாளிகை 1872-ல் கட்டப்பட்டது. இம்மாளிகை இவரது கோடைக் கால தங்குமிடமாக இருந்து வந்தது. இவர் கோடைக் காலத்தில் தம் குடும்பத்தினர் மற்றும் ஜாகீர் அலுவலர்களுடன் இம்மாளிகையில் தங்கியிருந்தார். இந்த மாளிகையையும் இதனை சுற்றியிருந்த 234 ஏக்கர் நிலத்தையும் ஆரணி ஜாகீர்தார் குடும்பத்தாரிடமிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்காக 1956-ஆம் ஆண்டில் அரசு தன் வசம் எடுத்துக் கொண்டது. மேற்படி நிலத்தில் 214 ஏக்கர் நிலத்தைத் தற்போது வருவாய்த் துறை 70 இலங்கை அகதிகள் குடும்பத்தினரின் மறுவாழ்விற்காக பங்கிட்டு அளித்துள்ளது. இந்த மாளிகை மட்டும் ஊரக வளர்ச்சித்துறையினரிடம் உள்ளது.

பூசிமலைக்குப்பம் மாளிகை கட்டி இன்றைக்கு 128 ஆண்டுகள் ஆகின்றன. கட்டடத்தின் வெளிப்புறம் காவி வண்ணமும், உட்புறம் வெண்மை நிறமும் பூசப்பட்டுள்ளது. சுவர்களில் ஆங்கிலேயர் பாணியில் பூச்செடிகள், மலர்கள் போன்ற ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையான ஓவியங்கள் அழிந்து போயுள்ளன. கட்டிடத்தின் தரைத்தளமும், மேல்தளமும் ஓரளவிற்கு நல்ல நிலையில் உள்ளன. மரக் கதவுகளும் வாசல்களும் ஜன்னல் கதவுகளும் முழுவதுமாக களவாடப் பட்டுள்ளன. சில ஜன்னல் சட்டங்கள் மட்டும் எஞ்சியுள்ளன. ஆங்கிலேயர் கால ஜாகீர்தார்களின் வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்வதற்கும், கட்டடக் கலையை அறிந்து கொள்வதற்கும் இம்மாளிகை நல்லதொரு நினைவுச் சின்னமாகும். ★

4

பல்லவர் கால முருகனின் சிறப்புத் தோற்றம்

அர. வசந்தகல்யாணி
சி. நி. கல்வெட்டாய்வாளர், சென்னை.

பல்லவர் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பதே அறிஞர் பலரின் கருத்து. ஆரம்ப காலத்தில் பிராகிருதத்தையும் சமஸ்கிருதத்தையும் போற்றினாலும் பின்னர் தமிழைப் போற்றினர். தமிழ் மன்னர்களாயினர். சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும் இவர்கள் காலத்தில் வளர்ந்தன. கலையும் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. பல்லவ மன்னர்கள் பலர் பரமபாகவதன், பரமமாகேஸ்வரன், பரம வைஷ்ணவன், பரமபிரம்மண்யன் என்று கூறிக்கொள்வதைச் செப்பேடுகள் வழி அறிகிறோம். இவர்கள் வடித்த திருமேனிகளில் முருகனுடைய உருவமைதியினை இங்கு காண்போம்.

பல்லவர், சிவஸ்கந்தவர்மன் என்றும், ஸ்கந்த சிஷ்யன் என்றும் தங்கள் பெயர்களில் ஸ்கந்தனை இணைத்து மகிழ்ந்தனர். கடவுளர் உருவங்களில் சோமாஸ்கந்தர் திருமேனிகளைப் பெருவிருப்புடன் வடித்தார்கள். ஏராளமான அழகுமிகு சோமாஸ்கந்தர் உருவங்களைக் கருவறை புறச்சுவரில் வைத்துத் தனிப் பாணியை உருவாக்கினார்கள். இந்தக் காலகட்டத்தில் தான் அவர்கள் சோமாஸ்கந்தனாகவும், சுப்ரமணியன் எனும் ஸ்கந்தனாகவும் முருகனை இணைத்தார்கள். "ஆய்கெழு கடவுட்புதல்வ - மால்வரை மலைமகள் மகனே" என்று போற்றிய சங்கப்பனுவல்களை மனதில் கொண்டு சுப்ரமணியர் எனும் ஸ்கந்தனை முருகனோடு இணைத்துப் படைத்தார்கள். சுப்ரமணியரும் முருகனும் வேறு வேறு என்பது போல் தோன்றினாலும் அவை ஒன்றேதான் என்பதைக் கலை வடிவுகளில் ஒன்றாக்கிக் காட்டினார்கள். கன்னியும் கடப்ப மாலையும் அவனுக்குக் கொடுத்துச் சில நேரங்களில் சன்னவீரம் எனும் வீரத்திற்கு அடையாளமான வீரச்சங்கிலியை மார்பில் அணியச் செய்த ஒரு மாறுபாடான முருகனை நாம் பல்லவர் காலக் கலைப்படைப்புகளில் காண்கிறோம். வீரத்திற்கு அடையாளமான சக்தியும், வஜ்ஜிரமும் ஏந்திய அவனது கரங்கள் அக்கமாலையும் கெண்டியும் ஏந்தி, ஜடாமகுடம் தரித்து காட்டப்பட்டன. இவ்வாறு இறைவனுடைய ஆளுமையில் முருகனும் சுப்ரமணியரும் ஒன்றே என்று கூறினாலும் நுண்ணிய மாறுபாடு காட்டத் தலைப்பட்டது ஏன்? என்ற சிறிய சிந்தனைக்குக் கிடைத்த விளக்கமே இக்கட்டுரையாக உருப் பெற்றது.

தொண்டை நாட்டுப் பகுதிகளான திருத்தணி, அயனாவரம், சோமங்கலம் போன்ற ஊர்களில் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் கால சுப்ரமணியர் உருவங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் அயனாவரம் பரசுராமீஸ்வரர் கோயிலில் அண்மையில் கண்டறியப்பட்ட சிற்பம் முருகன்தானா? என்ற கேள்விக்கு விடையாக முருகனுடைய இந்த வடிவம் பிரம்மசாஸ்தா என்றும், இந்த முருகனின் வடிவம் மேலிரு கரங்களில் அக்கமாலை கெண்டி ஏந்தி இருக்கும் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலத்தது. பொதுவான முருகனது கோலங்களிலிருந்து இது ஏன் மாறுபட்டு உள்ளது? இந்த மாறுபாட்டை இந்தச் சிற்பத்தில் மட்டுப் பல்லவர் காட்டினார்களா? அல்லது இதுவே பல்லவர்க்குரிய பாணியா? என்பதை அறியத் தமிழ் நாட்டில் காணப்படும் கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டு சிற்பங்களையெல்லாம் ஆய்வு செய்த போது பல்லவர்க்கு உரிய பாணி என்பதும், பல்லவர் அறிமுகப்படுத்திய வித்தியாசமான முருகன் உருவம் இது என்பதும் தெளிவாகியது.

பல்லவர் முருகனை ஏன் வித்தியாசமாகக் காட்டினார்கள்? என்ற அடுத்த கேள்வி எழுகிறது. இதற்கும் சான்றுகளுடன் விளக்கம் கொடுக்கலாம். பல்லவர் ஆட்சிக் காலத்தில் அதாவது மகேந்திரவர்மன் காலத்தில் பிரம்மா, ஈஸ்வரன், விஷ்ணு ஆகிய மூவருக்குமே கோயில்கள் அமைக்கப் பட்டதை அவன் கல்வெட்டால் அறிகிறோம். ஆயினும் யாது காரணத் தாலோ காலப்போக்கில் பிரம்மனுடைய வழிபாடு குறையத் தொடங்கிக் கோஷ்ட தெய்வமாக மட்டும் வைத்து வழிபடப்பட்டதைக் காண்கிறோம். இதற்குப் பல கதைக் காரணங்கள் சொல்லப்பட்டன. எவ்வாறு ஜேஷ்டா வழிபாடு பல்லவர் காலத்தில் மிகவும் சிறப்பாக இருந்து கடைசியில் வழி பாடே இல்லாமல் மங்கி மறைந்ததோ அதுபோலவே பிரம்மன் வழிபாடும் குறைந்து மறைந்தது. பிரம்மன் வழிபாட்டில் சற்று தொய்வு ஏற்படக் காரணம் சைவ மதத்தின் வளர்ச்சி என்று கூறலாம். இந்த வளர்ச்சியில் பிரம்மனுக்கான தனியிடம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டது. சிவனுக்கு அடுத்த நிலை பிரம்மனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்போதுதான் ஐந்து தலையுடன் அதிக கர்வம் கொண்டிருந்த பிரம்மனது ஒரு தலையை சிவன் கொய்த கதை சிறப்பாகப் பேசப்பட்டது. மேலும் அறிவின் கூறான பிரம்மனுக்கே பிரணவத்தின் பொருள் தெரியாததால் முருகன் சிறையிட்டது பற்றிய கதைகள் பரவலாக வழங்க ஆரம்பித்தன. ஆக இந்த இடத்தில் சற்று நிதானித்தால் பிரம்மனுடைய இடத்தில் தகப்பன் சாமியான அந்த முருகன் வைக்கப்படுகிறான் என்பதை உணரலாம். பொதுவாகவே ஸ்கந்தன் என்ற இறை வடிவம் பல்லவர்க்கு உகந்ததாகவே இருந்து வந்துள்ளது என்பதை முன்னர் கண்டோம். இந்த ஸ்கந்தன் தமிழ் முருக னோடு இணைக்கப்படுகிறான். அடுத்து வீரத்தின், வெற்றியின் கடவுளான அவன் அறிவின் கடவுளாக ஆக்கப்படுகிறான். அதனால்தான் பிரம்மத்தை அவன் பிரம்மனுக்கே போதிக்கிறான். பிரம்மத்தை, பிரம்மண்யத்தை

போதிப்பதால் பிரம்மண்யன், சுப்ரமணியன் என்ற முருகக் கடவுளாக உரு மாறுகிறார். எனவே ஸ்கந்தன் பிரம்மண்யன் ஆகிறான். சக்தியும் வஜ்ரமும் மாறி அக்கமாலையும் கெண்டியும் ஏந்தி நிற்கின்றான். பிரம்மண்யத்தை அனுசரிக்கும் இறைவன் சுப்ரமண்யன் (ஸ்கந்தன்) என்ற இந்தக் கருத்து ஸ்கந்தசிஷ்யனின் ராயக்கோட்டைச் செப்பேட்டிற்கு விளக்கம் அளிக்கும் போது திரு நா. சுப்பிரமணியம் அவர்களால் கூறப்படுகிறது.

இந்தோசீனாவிலுள்ள வாட்டலுவாங் கௌ என்ற இடத்தில் கிடைத்த 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவ கிரந்தத்தில் எழுதப் பட்டுள்ள சமஸ்கிருத கல்வெட்டில் தேவாநீகன் என்ற அரசனைப் புகழு மிடத்தில் அவன் புராண புருஷர்கள் பலருடன் ஓப்பிடப்படுகிறான்.

'பகவந் மஹா புருஷ ப்ரஹ்மண்ய
தாநு சாரீவ ப்ராஹ்மண்ய பாவே'

பிராம்மண்ய பாவத்தில் பகவான் மகாபுருஷனுடைய பிராம்மண்யத்தை அனுசரித்துச் செல்வோர்க்கு ஒப்பானவன் என்று அது பொருள்படும். ப்ரஹ்மண்யத்தை உடைய மகாபுருஷரான பகவான் ஒருவர், அவரிடமிருந்து அதைக் கற்று ப்ரஹ்மண்ய பாவத்தை அடைந்து அவரைப் பின்பற்றிச் செல்லும் சிஷ்யர் ஒருவர் ஆகிய இருவரும் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவர்கள் ஸ்கந்தனும் அவருடைய சிஷ்யருமே ஆவர், என்பார் தி.நா. சுப்ரமணியம் (பல்லவர் செப்பேடுகள் பத்து - பக்.96)

மேற்கூறிய இந்தக் கருத்தின்படி ஸ்தந்தன் தான் பிரஹ்மண்யன், சுப்ரஹ்மண்யன் என்பது பெறப்படுகிறது. இரண்டாம் நரசிம்மவர்மன் தன்னை பரம மாகேஸ்வரன், பரம பாகவதன், பரம ப்ரமண்யன் என்று கூறிக் கொள்வதும் இங்கு நோக்கத்தக்கது. (பல்லவர் செப்பேடுகள் பத்து பக். 83) சைவ மதம் மேலோங்கவும் பிரம்மனுடைய முக்கியத்துவத்தைக் குறைக்கவும், இந்த சுப்ரமணியனோடு ஏதோ ஒரு வகையில் பிரம்மா இணைக்கப்பட்டதை புராணக் கதைகள் கூறினாலும், இந்தக் கதைகளுக்குச் சிற்பங்கள் சிறந்த நேரடி சான்றுகளாய் அமைந்துள்ளன என்பது புதிய செய்தி. எனவேதான் பிரம்மாவின் கையிலுள்ள அக்கமாலையும் கெண்டியும் சுப்ரமணியர் கையில் கொடுக்கப்பட்டு அவன் பிரம்ம சாஸ்தா என அழைக்கப்பட்டான். அதாவது அறிவின் கடவுளான பிரம்மனின் வழிபாடு குறைக்கப்பட்டு சுவாமிநாதன், குருநாதன் என்ற பெயர்களில் சுப்ரமணியரின் வழிபாடும், முக்கியத்துவமும் மேலோங்கத் துவங்கியது. இந்தக் கருத்தை பி. ஆர்.ஸ்ரீநிவாசன் அவர்கள் கண்டியூரிலுள்ள முதலாம் இராஜேந்திரன் காலத்துச் சுப்ரமணியர் சிற்பத்திற்கு விளக்கம் கொடுக்கும்போது கூறி யுள்ளார்கள். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது. ஆனால் இந்த மாற்றமும் ஏற்றமும் எந்த அரச மரபில் யார் காலத்தில் ஏற்படத் தொடங்கியது என்பதைப் பற்றி அவர் ஏதும் கூறவில்லை. எனவே

மேற்கூறிய தொடர்ச்சியான கலை வரலாற்றைக் காணும் போது பிரம்ம சாஸ்தா என்றும் சுப்ரமணியர் என்றும் முருகனை உருவாக்கி மாறுபாடான இறைவடிவினைக் கொடுத்தவர்கள் பல்லவரே என்பதை உணரலாம்.

இந்த இடத்தில் மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும். கௌமாரன் எனப்படும் முருகனுடைய பெண் அங்கமாகக் கௌமாரி என்ற தேவி சப்த மாதருள் குறிப்பிடப்படுவாள். பொதுவாக இவள் முருகனது ஆயுதங்களைக் கைகளில் ஏந்திக் கண்ணிமாலையும், கரண்டமகுடமும் அணிந்து சன்னவீரம் மார்பில் திகழக் காட்சியளிப்பாள். தொண்டை நாட்டுப் பகுதியில் இந்த தேவியின் உருவமும் பல்லவர் காலப் படைப்பில் பல்லவர் முருகன் போன்று காட்டப்பட்டுள்ளது என்பதும் தொடர்ந்து பல்லவர் சிற்பங்களை ஆய்வு செய்யப்பட்ட போது அறியப்பட்டது. அதாவது முன்னர் பல இடங்களில் முருகனுக்குக் கூறியது போலவே சப்தமாதருள் கௌமாரியை இனங்கான அவளது கைகளில் உள்ள சக்திப்படையும், வஜ்ரமும் கண்ணியும் சண்ணவீரமும்தான் அடிப்படை. இதற்கு மாறாக திருத்தணி, ஆலப்பாக்கம், பெருங்காஞ்சி, சோமங்கலம், இராமஞ்சேரி போன்ற தொண்டை நாட்டுப் பகுதிகளில் கௌமாரியின் வடிவங்கள் அக்கமாலை கெண்டி ஏந்திக் காட்சி யளிப்பதைக் காணலாம்.

இனி அக்கமாலை, கெண்டி ஏந்தி நிற்கும் சுப்ரமணியரின் உருவங்கள் எங்கெங்கு கிடைத்துள்ளன என்று பார்க்கும்போது, அவை அனைத்துமே பல்லவர் ஆட்சிப் பகுதியில்தான் - அதாவது தொண்டை நாட்டுப் பகுதியில் தான் காணப்படுகின்றன. இதற்கு விதிவிலக்காக உள்ள முருகன் சிலைகளும் தொண்டை நாட்டுப் பகுதியில் காணப்படுவதை அறிந்து ஆய்வு செய்த போது மற்றொரு கருத்தும் பெறப்பட்டது.

தஞ்சை மாவட்டம் தண்டந்தோட்டம் சுப்ரமணியர் சம பக்கத்தில் நின்ற நிலையில் ஜடாமகுடம் தரித்து நெற்றியில் கண்ணிமாலை சூடி நான்கு கரங்களில் வஜ்ரம் சக்தி ஏந்தி அபயம் வரதம் காட்டி நிற்கிறார். முக அமைதி, அணிகலன்கள், கடிசூத்ரம், கனமான ஆடைக்கச்சை ஆகியவை பல்லவர் கலைப்பாணியை நினைவூட்டுகின்றன. மேலும் சிரச்சக்கரம் உள்ள டங்கிய நிலையில் இருப்பது, காலத்தின் பழமையைக் கணிக்க உதவுகின்றது. முற்காலச் சோழர் காலத்திய செப்புத்திருமேனிகளுள் இச்சிலை மட்டும் தனித்துக் காணப்படுவதால் இதனை முற்காலச் சோழர் காலச்சிலை என்பதைக் காட்டிலும் பிற்காலப் பல்லவர் சிலை என்று கூறலாம் என்பர் இரா. நாகசாமி (வலித்கலா தொகுதி). செப்புத் திருமேனியின் கலைச் சாயலைக் கொணடு அவர் கூறியுள்ள கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது. அப்படியாயின் பல்லவர் காலச் சிலையில் வஜ்ரம் சக்தி காட்டப்படுவது உண்டா? என்ற கேள்விக்கு விடையாக இதனை ஒருவகை மரபு என்று கொள்ள வேண்டும். கலையில் பல்லவர் அவர்களுடைய சாயலைக் காட்டி னாலும் சிலை வடிக்கப்பட்ட இடம் சோழநாடு என்பதால் சோழநாட்டு

மரபைப் பின்பற்றி ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன என்று கொள்ள வேண்டும். அதேபோல் சோழ நாட்டுக் கலை அமைதியில் மிக அழகான சிற்பமொன்று தொண்டை நாட்டு ஊரான சோமங்கலம் சோமநாதேஸ்வரர் கோயிலில் உள்ளது. இச்சிற்பம் முருகனுக்கான தனிக்கோயிலில் இருத் திருத்தல் வேண்டும். ஆடை அணிகலன்களும் முக அமைப்பும் இதனைக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கால முருகன் என்று உறுதியாகக் காட்டுகின்றன. ஆனால் சோழர் சிற்பங்களில் இருப்பதுபோல் சக்தி வஜ்ரம் இல்லாமல் அக்கமாலை கெண்டி ஏந்தி நிற்கின்றது. இது முன்னர் கூறியது போல் தொண்டை நாட்டில் சோழர் கலையமைதியில் பல்லவ நாட்டு மரபையொட்டி வடிக்கப்பட்ட சிலை என்பதை விளக்கவும் வேண்டுமா! தொண்டை நாட்டுப் பகுதியில் விஜயநகரர் காலம் வரை இந்தப் பல்லவர் பாணிதான் அதாவது அக்கமாலை, கெண்டிதான் முருக னுக்குக் காட்டப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்குச் சான்றாகத் திருவள்ளூர் வட்டத்திலுள்ள இராமஞ்சேரியில் உள்ள சப்த மாதர் குழுவிலுள்ள கௌமாரியைக் கூறலாம். இன்னும் சில இடங்களில் முற்காலச் சோழர் சிற்பங்களில் வஜ்ரமும் அக்கமாலையும் காட்டப் பட்டுள்ளன என்பதைக் கண்டியூர், சிவபுரம், தாதாபுரம் ஆகிய கோயில் களில் காணலாம். இதனைப் பல்லவர் மரபைக் கலந்து காட்டும் மரபு என்று கொள்ளலாம். ★

மூதேவிக்கு தனிக்கோயில்

விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டி வட்டம் திராசு என்ற கிராமத்தில் சிவன் மற்றும் காளிகோயில்கள் உள்ளன. காளிகோயிலை ஆய்வு செய்ததில் அது ஸ்ரீதேவியின் மூத்தவளான மூதேவி என்ற ஜேஷ்டாவின் தனிக்கோயில் என்று அறியப்பட்டது. வடக்கு நோக்கி யுள்ள இக்கோயில் தனி மதிலுடன் உள்ளது. கருவறையில் 105 செ.மீ. x 45 செ.மீ. அளவில் உள்ள கல்லில் தேவி மாந்தன் மாந்தியுடன் காணப்படுகிறாள். தேவியின் பக்கங்களில் காகமும், விளக்கமாறுக்குப் பதிலாக வெண் சாமரமும் காட்டப்பட்டுள்ளன. கருவறையின் முன்பகுதியில் முனிவர்கள் சிற்பங்களும் விநாயகர் சிற்பமும் உள்ளன. தமிழகத்தில் பல இடங்களில் உதிரிச் சிற்பமாகக் காணப் படும் சேஷ்டா சிற்பம் இங்கு தனிக்கோயிலாகக் காணப் படுவது சிறப்பாகும். களஆய்வில் விழுப்புரம் ஆசிரியர் சீ. வீரராகவன் உதவினார்.

ச. கிருஷ்ணமூர்த்தி,
தொல்லியல் அலுவலர், சிதம்பரம்.

5 The Palaeolithic Archaeology of the Kortallayar river basin Tamil Nadu

Shanti Pappu and Kumar Akhilesh
Sharma Centre for Heritage Education
Chennai

Introduction

This paper presents preliminary results of recent excavations at the Palaeolithic site of Attirampakkam, located in the Kortallayar river basin, TamilNadu. This region occupies a unique position in the history of Indian archaeology. The discovery of the first stone tool in the Subcontinent was made here, at Pallaveram, by the British geologist, R.B. Foote in 1863 (1866). Subsequently, the work of T. T. Paterson (1939) and V. D. Krishnaswami (1938), laid the foundations for future research in Indian Prehistory. Their construction of a four-fold river terrace sequence with associated prehistoric cultures; and the identification of a Lower Palaeolithic Acheulian handaxe based "Madras Industry" as contrasted with the flake-chopper facies of the "Soanian" continues to influence studies in Indian prehistory. The series of excavations conducted by K. D. Banerjee of the Archaeological Survey of India (I.A.R. 1962-63, 1963-64, 1965-66, 1966-67, 1978-79), once again drew attention to the problem of terraces and culture sequences within this region, but were marred by the lack of published reports.

A new look at the nature of the archaeological record in this region, in the light of recent theoretical and methodological advances in the subject, was thus required. Five years of field investigations (1991-1995) were conducted by S. Pappu (Pappu 1996, 1999, 2001a, 2001b, 2001c, 2002; Pappu *et al.* 1994, 2003). A regional approach with a multistage survey and sampling methodology, was adopted whereby an area of 200 km^2 was surveyed. A total of 22 sites with a

sample of 2012 stone tools, belonging to the Lower and Middle Palaeolithic and the Mesolithic were studied. Studies included a consideration of Pleistocene geomorphology, site taphonomy and lithic technology. The research forms a part of the broader objective of understanding variability seen in the Palaeolithic record and of exploring alternate models of hominid behavioural strategies during the Middle to Late Pleistocene. Subsequently, the site of Attirampakkam was chosen for excavation; being the first in a series of excavation; planned at Palaeolithic sites in the Palar river basin.

The Region and it's Archaeology

The region comprises an area of 200 km^2(79^0 40' : 79^0 56'E and 13^0 17' : 13^0 10' N) in the Kortallayar basin, which forms a part of the Palar basin, Tiruvallur district, Tamil Nadu. The regional geological context comprises the NNE-SSW-trending Allikulli and Satyavedu hills (200-380m AMSW) in the west, which are cobbla-to-boulder size fanglomerates or palaeodeltas of early Cretaceous age (Kumaraguru and Trivikrama Rao 1994). The lower-lying areas in the vicinity of the Allikulli Hills are underlain by a shales. These are capped by Tertiary to early Quaternary ferricretes. Older ferricrete (1.5-2.5 m thick), overlying bedrock, contains Acheulian to Middle Palaeolithic artefacts. Younger ferricretes contain Middle Palaeolithic artefacts and microliths. The region falls in an area of seasonally dry tropical conditions, receiving 105 to 125 cm of annual rainfall with a major peak occurring during late autumn and early winter.

Historically, the Kortallayar basin is well known for the identification and study of the 'Madras Handaxe Tradition' of the Lower Palaeolithic. Most Acheulian sites are, however deeply buried within ferricretes and thus the artefacts assemblages studied in the first phase of reserch comprised 1657 Middle Palaeolithic artefacts, collected from 22 sites. Sites have high artefact densities ranging from 3-4 to 28 artefacts/m^2 extending over areas of 50 m^2 to around 1 km^2. The study of both Lower and Middle Palaeolithic sites however,

involved a consideration of both natural and cultural processes, which could have resulted in the patterning of artefact assemblages observed.

Middle Palaeolithic assemblages are characterised by a wide range of reduction strategies; comprising flake, prepared core, flake-blade, point, blade and biface techniques; a lack of standardizatian of tool forms; mild retouch; reuse of older/broken tools/cores/debitage and use of unretouched flakes, flake-blades and thermal fracture flakes. Raw material includes pebbles, cobbles, boulders and natural thermal fracture flakes of quartzite, quartzitic sandstone, sandstone, and quartz. These were derived from the weathering and reworking of the Upper Gondwana Satyavedu and Sriperumbudur formations constituting the Allikulli hills, outliers and surrounding bedrock opediments. No site is more than 4 km. from raw material sources. In general elongated to subspherial clasts were preferred. In the case of sites located along the foothill zone and on hill slopes, artefacts are generally greater than 80 mm in size. Sites located in sheet and stream flood deposits, exhibit a decrease in clast sizes, which is in accordance with a decrease in the size of natural clasts available. Artefacts were made on cobbles, pebbles, flakes, debitage, older and broken tools and natural thermal fracture flakes. The bulk of tools are on flakes. Blanks include prepared core flakes, cortical flakes, noncortical flakes, flake-blades and blades; each of which display intersite variability in their usage. Broken/exhausted cores and artefacts occur particularly in localities away from easily accessible sources of raw material. Tools on debitage (debitage flakes, chunks, thermal fracture flakes) are more in number in areas away from raw material sources

Prepared cores, discoidal cores and irregular flake cores are noted. Cores may grade into chopping tools, pounding tools and bifaces. The highest number of cores is noted at sites further away from raw material sources. At most all sites almost equal percentages of early and late stage debitage are noted. In general only a few tool classes are noted at each

site. Most tools are on locally available clasts, have minimum retouch and considerable edge damage. This along with the fact that expedient use of natural thermal fracture flakes is important; could point to a relatively expedient strategy in the manufacture, use and discard of artefacts. At the same time, preparation of raw material in anticipation of use, and transport of cores/bifaces across the region is also noted. Most sites display evidence of both early and late stages of core reduction and artefact trimming, and at all sites the cortex percentage is very low. At no site is the debitage commensurate with cores, thus suggesting considerable movement of tools across the landscape. The concentration of handaxes and cleavers at the sites of Attirampakkam, Aryathur; chopping tools at Aryathur; and points and denticulates at Aryathur and Gunipalayam could point to some functional differenees between sites.

The large number of sites, located close together within a small area with evidence of reoccupation and high occupational intensity points to a high degree of mobility. Repeated reoccupation of sites through time could be a tied to anticipation of reusable raw materials, in particular in those areas where they are scarce. Resharpening of older tools, if assumed to be linked to raw material constraints and a manifestation of a logistically organised system are noted at some sites, which have tools with more that one edge retouched (Attirampakkam, Aryathur, Gunipalayayam). The existence of Levallois, blade and biface technology are thought to be associted with strategies representing fairly high mobility although these are always out-numbered by non-standardised tools.

Excavations at Attirampakkam (1999-2002)

Investigated for over a century, Attirampakkam, Tiruvallur district. Tamil Nadu (13⁰ 13' 50''N and 79⁰ 53' 20'' E; 37.75m AMSL) forms one of the classic sites in the history of Indian Palaeolithic archeology. Discovered by the British geologist, Robert Bruce Foote in 1863 (Foote 1866), it was sporadically investigated for over a century (Krishnawami 1938 I.A.R 1965-67). At present, gullies aud rain rills erode tools over an area of around 50,000m².

Excavations are in joint collaborations with scientists from France and India (M. Taieb, Y. Gunnell, J. P. Brugal, K. Anupama, R. Sukumar). Our ongoing excavations (1999-2002), aim at establishing the nature of hominid activities at the site, the environmental context of the site, and the age of the assemblages. These discoveries will be situated within the broader regional setting and would be able to contribute towards the study of early hominid behaviour during the Middle and Late Pleistocene in South Asia. The site was mapped (contour intervals of 1 m), and five test-trenches (4 m^2 each; maximum depth of 7.30 m), a step-trench (12 x 1m), and five trenches (144 m^2) were excavated.

Excavations revealed a multicultural site with stratified Lower, Middle and Upper Palaeolithic deposits in well-preserved primary contexts. A significant discovery was that of Acheulian artefacts in a 4m thick deposit of laminated clays (Layer 6; 2.96-6.90 m in test trench T3), which were previously assigned to Lower Cretaceous formation, and which our studies now show to be Pleistocene in age. The presence of Acheulian artifacts in clay beds indicative of a palaeofloodplain situation; represents a new ecological habitat to be identified in the Indian Palaeolithic. Acheulian artefacts comprising predominantly of handaxes among other tools, are on quartzites, which are not available locally. The paucity of debitage and cores indicate that early hominids brought largely finished tools to the site, possibly to exploit, water, game and plant resources.

At a depth of 3.6 m below the surface, an Acheulian living floor was exposed; with large boulder cores, artefacts and debitage in association with a set of animal footprints the first of their kind to be documented in South Asia. These comprise a set of 17 round impressions (diameter of 15-20 cm) and a set of hoof-prints, which are under study. Palaeo-magnetic measurments indicate an age of the Achulian within the Brunhes-Matuyama chron of 730 ka.

The clays were rapidly buried under ferrugionous gravel beds (average of upto 1 m thick), containing Middle Palaeolithic artefacts. The site was subsequently abandoned, a phase marked by archaeologically sterile clayey-silts (Layers, 3 and 4). These are capped by a ferricrete containing tools indicative of an Upper Palaeolithic horizon (Layer 2; average 0.20 m thick). Artefacts are on fine-grained quartzites. This horizon also yielded calcrete root casts, extensive animal burrows, possible post-holes and two conjoinable tools. Asterile clayey-silt (Layer 1) overlies this. Microliths, medieval potsherds and bricks are noted on the surface.

The discovery of three fossil teeth is significant, as fossils are rare at Indian Lower and Middle Palaeolithic sites. These include an upper molar of *Bovini*, possibly represening *Bubalus* (water buffalo) or *Bos*; a lower molar of Equus sp., and a left lower molar, *Caprinae* or *Boselaphini* (*Boselaphus*: nilgai). These indicate at least three different fossil species suggestive of an open and wet landscape.

Attirampakkam is unique in providing an opportunity to study transitions through time, and changing hominid adaptive strategies over the Pleistocene, with assemblages preserved in a largely primary context. Ongoing attempts to date the site using palaeomagnetic measurements, ESR, U/Th techniques, palaeobotanical studies and studies related to molecular biology are in progress, and will yield new evidence on the South Asian Palaeolithic.

Acknowledgements

We gratefully acknowledge the Department of Archaeology, Government of Tamil Nadu for their kind cooperation. We thank Dr. R. Kannan, Commissioner, Archaeology and Museums, Government of Tamil Nadu; Mr. M. Chandramurthy, Mrs. S. Vasanthi, Dr. S. Rajagopal, Dr. V. Vedachalam, who visited the site and gave us their kind suggestions. We thank the Archaeological Survey of India for granting permission for excavation. Scientists at the French Institute Pondicherry and

CEREGE, France kindly aided us in environmental studies. We thank the Homi Bhabha Fellowships council, the Leakey Foundation and the Sharma Centre for Heritage Education for financial and logistic support. We are grateful to students of The Institute of Epigraphy, who participated in the excavation as volunteers. We thank Mr. V. R. Pappu and Mrs. R. Pappu and Mr. Abhijit Ghosh for their continuous encouragement in this venture.

References

Foote, R. B. 1866. 'On The Occurrence Of Stone Implements In Lateritic Formations In Various Parts Of The Madras And North Arcot Districts' *Madras Journal Of Literature And Science*, 3rd. Series (II) : 1-35.

I.A.R.: Indian Archaeology. A Review. 1962-63, 1963-64, 1964-65, 1965-66, 1966-67, 1978-79.

Krishnaswami, V. D. 1938. 'Environmental And Cultural Changes Of Prehistoric Man Near Madras', *Journal Of The Madras Geographic Association* 13:58-90.

Kumaraguru, P. and Trivikrama Rao. 1994. 'A reappraisal of the geology and tectonics of the Palar basin sediments, Tamilnadu', in *Ninth International Gondwana Symposium, Hyderabad*, Jan. 1994, pp, 821-831. Geological Survey of India and Balkema, Rotterdam, vol.2.

Paterson, T.T. 1939. Stratigraphic and typologic sequence of the Madras Palaeolithic Industries in *Studies on the Ice Age and Associated Human Cultures*, eds. H. de Terra and T. T. Paterson, Carnegie Institution of Washington Publication No. 493, Washington, pp. 327-330.

Pappu, S.A. Kshirsagar and V. Sathe, 1994, Discovery Of A Middle Holocene Sub-Fossil Bone From Tiruvallur Taluk, Chingleput District, Tamil Nadu,' *Current Science*, 67(6): 431-433.

Pappu, S. 1996. 'Reinvestigation Of The Prehistoric Archaeological Record in The Kortallayar Basin, Tamil Nadu', *Man And Environment*, XXI (1): 1-23.

Pappu, S. 1999. 'A Study Of Natural Site Formation Processes In The Kortallayar Basin, Tamil Nadu, South India,' *Geoarchaeology: An International Journal* 14(2): 127-150.

Pappu, S, 2001 a. Middle Palaeolithic Stone Tool Technology In The Kortallayar Basin, South India.' *Antiquity* 75(2001), 287: 107-117.

Pappu, S. 2001b. 'The Environment In Prehistoric Research: A Case Study From The Kortallayar Basin, Tamil Nadu', in *People And Environment In India: Essays In Environmental Anthropology* (K.K. Misra And M.L.K. Murty Ed.); pp. 24-38. New Delhi: Discovery Publishing House.

Pappu, S. 2001c. 'Recent Research Into The Palaeolithic Archaeology Of Tamil Nadu, South India,' *Praehistoria* 2:85-96.

Pappu, S., Yanni Gunnell, Maurice Taieb, Jean-Philippe Brugal, Yannick Touchard, 2003. 'Ongoing Excavations At The Palaeolitic Site Of Attitrampakkam, South India: Preliminary Findings', *in Press, Current Anthropology*:

இலத்தீன் வாசகத்துடன் ஆங்கிலேயர் காசு

பிரிட்டிசு அரசர் நான்காம் சார்சு கி.பி. 1830-இல் வெளியிட்ட செப்புக்காசு ஒன்று கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் தக்கலையைச் சேர்ந்த திரு.செல்வின் என்பவரிடமிருந்து கிடைத்துள்ளது.

காசின் முன்பக்கம் நான்காம் சார்சு மன்னனின் உருவமும், உருவத்தைச் சுற்றி "DEI GRATIA" என இலத்தீன் மொழி வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன.

பின்பக்கத்தில் கையில் மலர் ஏந்திய பெண் ஒருத்தியின் அமர்ந்த உருவமும், அவ்வுருவைச் சுற்றி 'BRITANNIAR REX FID DEF" என்ற இலத்தீன் மொழி வாசகமும் எழுதப்பட்டுள்ளன. பெண்ணின் கையில் உள்ள மலர் முத்தலைவேல் வடிவில் காணப் படுகிறது. கொண்டையின் மீது ஒரு கிளி அமர்ந்துள்ள காட்சி காணப்படுகிறது.

"DEI GRATIA" என்ற இலத்தீன் வாசகத்திற்கு "By the Grace of God" என்றும், BRITANNIAR REX FID DEF என்பதற்கு King of Federation of Great Britain" என்றும் பொருள்.

தே. கோபாலன்
தொல்லியல் அலுவலர்
கன்னியாகுமரி

6

தமிழகம், சீனா பண்டைத் தொடர்புகள்

ப. சண்முகம்
பேராசிரியர் துறைத் தலைவர்,
தொல்வரலாறு தொல்லியல்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

மிகத் தொன்மையான நாகரிக வளர்ச்சியைக் கொண்டது சீனநாடு. சற்றேரக்குறைய ஆறாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பண்பாட்டை உடையது. இப்பழம்பெரும் நாட்டுடன் மிகப் பண்டைக்காலம் முதலே இந்தியா பண்பாட்டு உறவுகளை மேற்கொண்டிருந்தது. சீனாவிலிருந்து பட்டு இறக்குமதி செய்யப்பட்டதென்று அர்த்தசாஸ்திரம் (கி.மு. 4-3 ஆம் நூற்றாண்டுகள்) சான்று பகரும். மற்ற இலக்கியங்களும் பிற கல்வெட்டுகளும் இது தொடர்பான செய்திகளை நமக்கு அளிக்கின்றன. புத்த சமயம் சீனாவில் பரவியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள் மேலும் வலுப்பெற்றன.

தமிழ் நாடும் சீனாவும் எப்பொழுது பண்பாட்டு உறவுகளை மேற்கொண்டன என்று சரியாக வரையறுக்க இயலவில்லை. ஆயினும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடர்புகள் ஏற்பட்டிருக்கலாம். இது தொடர்பான பல சான்றுகள் தமிழகத்திலும் சீனாவிலும் கிடைக்கின்றன. சீன இலக்கியம், தமிழ்க் கல்வெட்டுகள், சீனப் பீங்கான் மற்றும் சீனக் காசுகள் போன்ற தொல்பொருள்கள் மூலமாக இத்தொடர்புகளை அறியலாம். இவ்விரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் புத்த சமயம், சமுதாயம், கடல் வணிகம் போன்ற துறைகளில் மேலோங்கியுள்ளது.

தமிழகத்தைப் பற்றி சீனர்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே அறிந்திருந்தனர். வூ. டி. (Wu di, கி.மு. 140-86) என்ற சீன அரசர் காலத்தில் ஹுவங்சு (Huangzhi) பகுதியோடு வணிக உறவுகள் இருந்ததென பாங் கோ (Pan ko, கி.பி. 32 - 92) என்ற சீனரால் எழுதப்பட்ட சியன் ஹன் சு Qian Han shu) என்ற நூல் தகவல் அளிக்கிறது.[1] மேலும் இப்பகுதி அதிக மக்கள் தொகையைக் கொண்ட பெரிய ஊர். வியட்நாமின் கீழைக்கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மக்களைப் போன்றே இவர்களும் இருந்தனர் என்றும் இப்பகுதியில் பல சிறப்பான செயல்பாடுகள் உள்ளன எனவும் இந்நூல் குறிக்கிறது. ஹுவாங்சு பகுதி பொதுவாக காஞ்சிபுரம் (காஞ்சிபுர மாவட்டம்) என்று கருதப்படுகிறது. காஞ்சிபுரத்தின் தொன்மை பற்றி

கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை. மத்திய, தமிழ்நாடு அரசுகளின் தொல்லியல் துறைகளும், சென்னைப் பல்கலைக்கழகமும் மேற்கொண்ட அகழாய்வுகள் மூலமாக இந்நகரம் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று தெரியவந்துள்ளது.

கிருத்து சகாப்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் சீன அரசு ஹூவங்சு பகுதியோடு அரசமுறை உறவுகளை மேற்கொள்ள விழைந்தது. சீனப் பேரரசர் பிங் டி (Ping di) யின் ஆட்சிக் காலத்தில் அரசர் வாங் மாங் (Wang Mang) காண்டாமிருகத்தைக் கேட்டுப் பெற்றார். ஆயினும் இவ் விலங்கை ஹூவாங்சு பகுதியின் தூதுவர்கள் கொண்டு செல்லாமல் சீன அரசரின் தூதுவர்களே அழைத்துச்சென்றனர். இதனால் தமிழ்நாட்டுடன் நெருங்கிய அரசுமுறை உறவு ஏற்படவில்லை.[2]

புத்த மதம் சீனாவில் பரவியதையடுத்து இரு நாட்டுச் சமயத் துறவிகள் பரிமாற்றம் ஏற்பட்டது. இந்திய மதவாதிகளில் காஞ்சிபுரத்தைச் சார்ந்த போதிதருமர் புத்த மதத்தை சீனாவில் பரப்பச் சென்றார். இவர் கி.பி. 520-இல் சீனாவின் தென் பகுதியில் அமைந்த கான்டன் நகரை அடைந்து தியான மார்க புத்த மதத்தைப் போதித்தார். இந்தியாவிற்கு கி.பி. 7-ஆம் நூற்றாண்டளவில் வந்த யுவான் சுவாங் என்ற புத்தத் துறவி அசோகரால் கட்டப்பட்ட தூபிகள் காஞ்சிபுரத்தில் இருந்ததென உரைப்பர்.

கியோ தங்க் சு (Kieou Tank Chou) என்ற நூல் சீன வணிகர்களுக்காக பல்லவ நாட்டில் கட்டப்பெற்ற கோவிலைப் பற்றிய தகவலை நமக்கு அளிக்கிறது. முதலாம் நரசிம்மவர்மன் மாமல்லபுரம் அல்லது காஞ்சிபுரத்தில் இக்கோவிலைக் கட்டுவித்திருக்கலாம்.[3]

சோழர் ஆட்சியில் சீனாவுடனான வணிகம் மேலும் வலுப்பெற்றது. வணிக தூதுக்குழுக்கள் பல சீனாவுக்கு அனுப்பட்டது. அவற்றுள் ஒரு முக்கியக் குழு முதலாம் இராசராசனால் அனுப்பப்பட்டது. அக்குழுவில் 52 பேர் இருந்தனர். சீனத் தலைநகரில் 1015 இல் இறங்கியது. சீன அரசருக்கு விலையுயர்ந்த பல பரிசுப் பொருள்களை அக்குழு வழங்கியது. இத்தூதுக் குழுவின் மூலம், சீன நாட்டுடன் வணிக உறவுகளை மேம்படுத்தத் தன் விருப்பத்தைத் தெளிவு படுத்தினார் சோழ அரசர்.[4]

இத் தொடர்புகளினால் இரு நாடுகளுக்கிடையே வணிக உறவுகள் மேம்பட்டன. இதன் வெளிப்பாடாகத் தமிழ் நாட்டு வணிகர்கள் பலர் சீனா சென்றனர். தமிழ் வணிகர்களுக்காக சீனாவின் தென்பகுதியில் அமைந்த குவங் சு (Quan Zhou) நகரத்தில் கோயில் ஒன்று கட்டப்பட்டது. இக்கோவிலை சம்பந்தப் பெருமாளான தவச் சக்கரவத்திகள் கி.பி. 1281 ஆம் ஆண்டு கட்டுவித்தார். இக்கோவில் அன்றைய சீன அரசரான செகசை கானின் (குப்லா கான்) அனுமதியோடு கட்டப்பட்டது. இக் கோவில் சீன அரசர் பெயரால் திருக் கானீச்சுரம் என்று வழங்கப்பட்டுள்ளது[5] குறிப்பிடத்

தக்கது. வணிக நடவடிக்கைகளுக்கு சீன அரசும் உதவி செய்துள்ளது என்பதையும் இதன் மூலம் அறியலாம். இச் செய்தியை அங்குள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டின் முழு வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.[6]

1. ஹர: ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1203 வது சித்திரை
2. ச் சித்திரை நாள் ஸ்ரீ செ கசை கான் திருமேனிக்கு நன்
3. றாக உடையார் திருக் கானீச்சுரமுடைய நாயனாரை
4. ஏறியருளப் பண்ணினார் சம்பந்தப் பெருமாள்
5. ஆன தவச்சக்கரவத்திகள் செ க சைகான் பர்மான்
6. படி

தமிழ் நாட்டுக் கோவிலின் பல பகுதிகள் சீனாவில் கிடைத்துள்ளன. குவான் சு நகரில் கைய் யூன் (Kai Yuan) என்ற கோவிலில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. திருமாலின் முழு வடிவச் சிலை இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளது. பல தூண்களில் புடைப்புச் சிற்பங்களாக சீதேவி பூதேவியுடன் அமர்ந்த திருமால், நரஸிம்ஹர், ஆடை கவரும் கிருஷ்ணன், தாமோதிரன், மற்றும் பைரவர் போன்ற வடிவங்கள் உள்ளன. தமிழ் வணிகர்களுக்கான கோவில் இருந்தமையால் தமிழ் வணிகர் குடியிருப்பு இருந்திருக்கலாம்.[7]

யுவான் சி (Yuan Shi) என்ற 13 ஆம் நூற்றாண்டு சீன நூல் தென் னிந்தியாவுடன் பரிமாறிக் கொண்ட தூதுக்குழுக்கள் பலவற்றைப்பற்றி தகவல்கள் தருகிறது, இந்தக் கால கட்டத்தில் சீன அரசு தென்னிந்தியாவுடன் மேற்கொண்ட வணிகத்திற்கு சில கட்டுப்பாடுகளை 1296 இல் விதித்தது. முக்கியமாக பொன், வெள்ளி ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியது.[8] இக் கட்டுப்பாடுகளை மீறி தென் இந்தியாவுடனும் தமிழகத்துடனும் வணிகம் தொடர்ந்தது. மார்கோ போலோவின் கூற்றுப்படி சீனத் துறைமுகங்களில் இந்திய வணிகர்களின் கப்பல்கள் மிகுந்திருந்தன.

இதே காலகட்டத்தில் எழுதப்பட்ட (கி.பி. 1350) தயெ சுலி (Daoyi Zhilue) என்ற நூலும் தென் இந்திய வணிக உறவுகளைக் குறிப்பிடும். சீன வணிகர்கள் இருப்பிடம் நாகபட்டினத்தில் இருந்துள்ளது. சீன வணிகர் களுக்காக இவ்வூரில் செங்கல் கோயில் (Tuta) ஒன்று கட்டப்பட்டது. இக் கோவில் கட்டுமானப் பணி கி.பி. 1267 இல் முடிவுற்றது என்றும் இந்நூல் தெரிவிக்கிறது.[9]

மேலும், த படன் (Da Badan) என்ற தென் இந்தியத் துறைமுக நகரத்துடன் வணிக உறவுகள் இருந்ததை இந்நூல் குறிப்பிடும். இத் துறைமுக நகரம் தமிழகத்தில் உள்ள பெரிய பட்டினம் என்று நொபொரு கராசிமா குறிப்பிடுவர். கப்பல்கள் வந்து செல்வதற்கான அமைப்பை பெரியபட்டினம் அக்காலத்தில் கொண்டிருந்தது. அங்குள்ள கப்பலூரணி என்ற பகுதி கப்பல்கள் நங்கூரமிடத் தேவையான வசதிகளைப் பெற்றுள்ளது எனக் குறிப்பர்.[10] இங்கு தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய அகழாய்வு களில் சீனப் பீங்கான்கள் பெருமளவு கண்டெடுக்கப்பட்டுள்ளன.[11]

சீனாவிலிருந்து பச்சை நிறமுடைய பீங்கான்கள் (Celadon) பெருமளவில் இந்தியா, பாரசீகம் எகிப்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பலவண்ண பட்டுத் துணிகள், சிவப்பு, பச்சை கண்ணாடி மணிகள் இரும்பு பொருள்கள், செம்பு பொருள்கள், தகரம், சீன மது ஆகிய பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.[12] இந்தியாவிலிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பல பொருள்களை நம் சான்றுகள் பட்டியலிட்டாலும்[13] குறிப்பாகத் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களைத் தனியே பிரித்து அறிவது சற்றுக் கடினமே.

பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் ஏற்பட்ட வணிக உறவுகளை நிலை நிறுத்தும் வண்ணம் தமிழகத்தில் பல அரிய தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. இவற்றில் சீனாவில் செய்யப்பட்ட பீங்கான்களும், காசுகளும் முக்கியமானவை.

சீனப் பீங்கான் வணிகம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து வேகமாக வளர்ச்சியுற்றது. சீனாவில் நிலவிய பொருளாதாரத் தன்மைகள் பல இவ் வளர்ச்சிக்கு உதவின. சீன அரசும் பல சமயங்களில் ஊக்கமளித்தது. ஐரோப்பா மற்றும், பாரசீக நாடுகளோடு நெருங்கிய வணிகம் மேற்கொள்ளப்பட்டது. இங்கெல்லாம் பீங்கான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. பீங்கான்களை ஏற்றிக்கொண்ட கப்பல்கள் பலவும் இந்தியா மற்றும் இலங்கையைச் (ஸ்ரீ லங்கா) சுற்றிச் செல்லவேண்டியதாயிற்று. இன்னிலையில் இந்தியத் துறைமுகங்களின் வழி இப்பொருள்கள் செல்ல நேரிட்டது. இவ் வகையில் சீனப் பீங்கான்கள் தமிழ்நாடடுத் துறைமுகங்களில் இறக்கப்பட்டு மேலைக் கடற்கறை நாடுகளுக்கு ஏற்றி அனுப்பப்பட்டன. இப் பரிமாற்றம் நடைபெற்ற இடங்களிலெல்லாம் சீனப் பீங்கான்கள் கிடைத்துள்ளன. இவ்வகையில் தமிழகத்துத் துறைமுகங்கள், ஊர்கள் பலவற்றிலும், சீனப் பீங்கான்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பழவேற்காடு, கோவளம், அரிக்கமேடு, தரங்கம்பாடி, நாகபட்டினம், தேவிபட்டினம், பெரியபட்டினம், பழையகாயல் போன்ற துறைமுகங்களிலும் சீனப் பீங்கான்கள் கிடைத்துள்ளன. பச்சை வண்ணப் பீங்கான்கள் கணிமங்கலம் (மதுரை மாவட்டம்), செட்டூர் (விருதுநகர் மாவட்டம்) ஊர்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[14] கங்கை கொண்ட சோழபுரம், பெரியபட்டினம் அரிக்கமேடு,[15] தாராசுரம் போன்ற சில ஊர்களில் அகழாய்விலும் சீனப் பீங்கான்கள் கிடைத்துள்ளன. தமிழ் நாட்டில் பீங்கான் வணிகம் 12 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

தமிழகத்தில் கிடைத்த சீனப் பீங்கான்களில் கங்கை கொண்ட சோழபுர அகழாய்வில் கிடைத்த வெள்ளை நிறப் பீங்கான் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.[16] பச்சை வண்ணமுடைய (Celedon) பீன்கான்கள் லோங்குகான் (Longquan) பூஜியன் (Fujian) பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வகைப் பீங்கான்கள் பழையகாயல். பெரியபட்டினம், தேவி

பட்டினம், நாகபட்டினம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளள. வெள்ளை நிறப் பீங்கான்களும் (De Hua) அவற்றில் நீல வண்ண உருவங்கள் தீட்டப்பட்ட பீங்கான்களும் கிடைத்துள்ளன. இவை பொதுவாக கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்டவை. பழுப்பு, மா நிற பூச்சுடைய பீங்கான்களும்(Guangdon) தமிழகத்தில் கிடைத்துள்ளன.

சீன நாட்டுடன் மேற்கொண்ட வணிகத்தினை நிலை நிறுத்தும் மற்றொரு சான்று சீன நாட்டுக் காசுகள். இக்காசுகள் பல தமிழகத்தில் கிடைத்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று ஊர்களில் சீனக் காசுப் புதையல்கள் கிடைத்துள்ளன. விக்கிரம் (பட்டுக்கோட்டை தாலுகா) என்ற ஊரில் 20 சீனக் காசுகளும், தல்லிக்கோட்டை (மன்னார்குடி)யில் 1822 காசு களும், ஒலயக்குன்ன (பட்டுக்கோட்டை)த்தில் 323 காசுகளும் கிடைத்துள்ளன. இக்காசுகளில் மிகப் பழமையான காசு கி.மு. 142 ஆம் ஆண்டைச் சார்ந்தது. கி.பி. 1241-ஆம் ஆண்டு வரை வெளியிட்ட காசுகள் கிடைத் துள்ளன. இருப்பினும் இக்காசுகளில் அதிக அளவு காசுகள் சுங் (960-1279) அரச குலத்தைச் சார்ந்த மன்னர்களின் காசுகள்.[17]

தமிழகத்தின் பிற ஊர்களிலும் சீனக் காசுகள் கிடைத்துள்ளன. பாண்டிசேரி, மதுரை (வைகை ஆற்றுப் படுகை),[18] தரங்கம்பாடி, நெடுங் காடு, தேரழுந்தூர் ஆகிய ஊர்களிலும் கிடைத்துள்ளன. பாண்டிச்சேரியில் கிடைத்த காசு சுங் அரசரால் வெளியிடப்பெற்றது.[19] தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள ஊர்களில் கண்டெடுக்கப்பட்ட மூன்று காசுகளில் ஒரு காசு ஜின் அரச குலத்தைச் சார்ந்தது. கி.பி. 1224-1236க்கு இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பெற்றது. மற்ற இரண்டு காசுகள் மிங் அரச குலத்தைச் சார்ந்தது. கி.பி. 1628-1644க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பெற்றது.[20] நெடுங்காட்டில் கிடைத்த நான்கு காசுகளில் இரண்டு காசுகள் செ சாங் (1085-1100) அரசராலும், மற்ற இரண்டு காசுகள் ஹ்யூ சாங் (1100-1106) அரசராலும் வெளியிடப்பட்டவை.[21]

சீன மொழியில் இரண்டு சொற்களைக் கொண்ட ஒரு வெண்கல மணி, திருவாரூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சாந்தி சாந்தி என்ற பொருளுடைய வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மணி கி.பி. 11-12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கலாம். இம்மணி சீன வணிகர் அல்லது புத்தத் துறவியினுடையதாக இருக்கலாம்.[22] இந்த மணியுடன் மூன்று சீனக் காசுகளும் சீனக்காசின் துண்டொன்றும் கிடைத்துள்ளது. இவற்றில் ஒரு காசு படத்துடன் வெளியிடப்பெற்றுள்ளது. அக்காசு ஹ்யூ சாங் (கி.பி. 1120-1106) என்ற சீன அரசரால் வெளியிடப்பெற்றது.[23]

1, K.A. Nilakanta Sastry, *Foreign Notices of South India*, University of Madras, 1939, பக். 43-44; A.A. Bokshchanin, "Sino-Indian Relations from Ancient Times to the Sixteenth Century" in S.L. Tikhvinsky, (ed) *China and Her Neighbours from Ancient Times to the Middle Ages*, Progress Publishers, Moscow, 1981, பக்- 112-113.



தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட சீனப் பீங்கான்கள்



2. A. A. Bokshchanin, முன் குறித்த நூல் பக். 113-114.
3. John Guy. The Lost Temples of Nagapattinam and Quanzhou: A study in Sino-Indian Relations, in *Silk Road Art and Archaeology* Vol. 3, Kamakura, 1994, பக். 293.
4. A.A. Bokshchanin, முன் குறித்த நூல் பக். 129.
5. Karashima, N., Trade Relations between South India and China during the 11th and 14th Centuries, *Journal of East - West Maritime Relations*, Vol. I, (1989) பக். 59-81.
6. N. Karashima, "Tamil Inscriptions in Southeast Asia and China", in Noboru Karashima, Ed., Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of inscriptions and Ceramic Sherds, Taisho University, 2002, பக். 16; T.N. Subramaniam, "A Tamil Colony in Medieval China", in South Indian Studies, Ed. R. Nagaswamy, Society for Archaeological Historical & Epigraphical Research. Chennai, 1978, பக். 3-9.
7. John Guy, முன் குறித்த நூல் பக். 293: T. N. Subramaniam, முன் குறித்த நூல் பக். 1-52.
8. K.A. Nilakanta Sastry, முன் குறித்த நூல் பக். 32.
9. John Guy, முன் குறித்த நூல் பக். 293.
10. Karashima, N., "Trade Relations between South India and China during the 13th and 14th Centuries," *Journal of East - West Maritime Relations*, Vol. I, (1989) பக். 59-81-
11. மேலது. Y. Subbarayalu, "Chinese Ceramics of Tamilnadu and Kerala Coasts", in *Tradition and Archaeology: Early Maritime Contacts in the Indian Ocean, ed.* H. P. Ray and Jean Francois Salles, Manohar, 1996, பக். 112.
12. Peter Hardie, China's Ceramic Trade with India, in *Transaction of the Oriental Ceramic Society*, Vol. 48, பக். 19.
13. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டப் பொருள்களாவன: யானைகள், காண்டாமிருகம், ஆமை, ஆமை ஓடு, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், துணி வகைகள், கம்பளி விரிப்புகள், வாசனைப் பொருள்கள், கட்டி வெல்லம், கரு மிளகு, இஞ்சி, A.A. Bokshchain, முன் குறித்த நூல் பக். 117.
14. தினமணி, 15-2-95.
15. Vimala Begley, ed., *TheAncient Port of Arikamedu I*, Ecole Francaise, d' Extreme Orient, Pondichery, 1996, பக். 115-285.
16. Karashima, N. "Trade Relations Between Tamilnadu and China During the 13th and 14th Centuries", in *Proceedings of the Sixth International Conference-Seminar of Tamil Studies*, Kuala Lumpur, 1987; Yoji Aoyagi and Yoh Kanazawa, "Chinese Ceramic Discovered at East Coast in South India," in *Trade Ceramics Studies*' No. 8, Tokyo, 1988, (in Japanese) பக். 88-100.

17. N. Sankaranarayana, "Three hoards of Chinese Coins in Madras Gover nment Museum" *Journal of the Numismatic Socicty of India*, Vol. 33, 1971, pl. ii, பக். 61-68.

18. தினமணி, 15-2-95.

19. Madras Museum Annual Report, 1948-49, Madras Museum Accession No. 815, Madras.

20. நடன. காசிநாதன், தமிழர் காசு இயல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக். 42-43.

21. T. Satyamurthy, "Chinese Coins from the Temple at Nedungadu," *Studies in South Indian Coins*, Vol. 8, 1998, பக். 69-73.

22. அளக்குடி ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 1. தஞ்சாவூர், 1994, பக். 21.

23. அளக்குடி ஆறுமுக சீதாராமன், தமிழகக் காசுகள், தஞ்சாவூர், 2002, பக். 10.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் நிகழ்ந்த திங்கட்பொழிவில் படிக்கப்பட்ட கட்டுரை. ★

பார்சனப்பள்ளி பாறைச் சிற்பங்கள்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் கரும்பூர் தொகுப்பைச் சேர்ந்த பார்சனப்பள்ளி, ஆம்பூருக்கு தென்கிழக்கே 7 கி.மீ. தொலைவில் உள்ள சிறுகிராம மாகும். இவ்வூர்ச் சென்னராயன் மலையில் அமைந்த பாறையில் தெளிவற்ற விநாயகர், திருப்பாதம், மாட்டின் குளம்பு, பாம்பு உருவக் கீறல் ஆகிய உருவங்கள் உள்ளன. விநாயகர் போன்று தெளிவில்லாதுள்ள சிற்பத்தின் பின் பகுதியில் மயில் போன்ற ஒரு பறவையின் உருவமும் உள்ளது. இதனை மக்கள் மயூரவிநாயகர் என்றழைத்து வழிபடுகின்றனர். விநாயகர் சிற்பத்திலிருந்து சற்று தூரத்தில் பாறையில் 40 செ.மீ x 20 செ.மீ. அளவில் பாதங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மக்கள் பெருமாள் பாத மென்று அழைத்து வழிபடுகின்றனர். அருகில் உள்ள மாட்டின் குளம்பு உருவினையும் மக்கள் வழிபடுகின்றனர். கீறலாக உள்ள பாம்பின் உருவினை நாகல்லம்மன் என்று வழிபடுகின்றனர். அருகில் பாம்பு புற்றும் உள்ளது. பாறை சிற்பங்கள் 18-19ஆம் நூற்றாண்டாகலாம். ஆகம வழிபாட்டுத் தாக்கமில்லாத - வளமில்லா ஊர்களில், கோயில்கள் இல்லாத இடங்களில், நிலவும் மக்களின் கிராமிய வழிபாட்டை இச்சிற்பங்கள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர், சென்னை

Kamudi Fort

7

R. NARAYANAN
Junior Engineer
Dept of Archaeology, Chennai

Kamudi fort is situated on the high ground above the Gundar river near Kamudi Town, Kamudi Taluk, Ramanathapuram Dist. This was built by king Thiru Udaya Thevar alias Vijaya Regunatha Sethupathi of Ramnad (1711-1725 A.D.) According to the Manual of Ramanathapuram (Published in 1891), this fort was originally planned and built with the assistence of French Engineers. A document dated 1770 A.D. available at the Tamil Nadu Archives tells that the fort was situated in the midst of thick forest on the highway leading to Tirunelveli and Panchalankurichi. This was a small but strong fort with two lines of fortifications. Legends say Kattabomman stayed here on his way to Ramanathapuram to meet collector Jackson on 9th Sept. 1798. So the local people call this as 'Kattabomman Kottai', even though it belong to Sethupathis of Ramnad.

During 1799 A.D. an armed rebellion organised by Mylappan Servaikaran, the faithful servant and captain of Muthuramalinga Vijaya Regunatha Sethupathi (1762 - 1795 A.D.), the British force tried to seize this fort. But it was defeated. After the fall of Panchalankurichi, 25th August 1801, the forces of East India company controlled this strong fort. But the Sivagangai Marudhu brothers captured it from the British. Soon the company's forces recaptured it.

To avoid further recurrence of local rebellion the court at Madras Presidency ordered the demolision of all forts in Tirunelveli, Madurai, Ramanathapuram and Dindigul, in 1801. As per the order, the collector of Ramanathapuram made arrangements to demolish Kamudi fort. Now only the core wall portions are remain.

This ancient fort remains were declared as a protected monument and now preserved by the Tamil Nadu State Dept. of Archaeology. ★

மாசித் திருநாள் என்னும் மாசிமக நீராடல் விழா

8

வெ. இராமமூர்த்தி
வ.மு.அகழாய்வாளர்

மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியினைத் தருவது திருவிழாக்கள். பண்டைத்தமிழர் தம் வாழ்வில் திங்கள்தோறும் திருவிழாக் களை நடத்தி இன்புற்றிருந்தனர். ஊர் ஒன்று கூடி உறவினர்கள் கலத்துரையாடி, இறைவனை வழிபட்டு, திருவிழாக்களை முறையே ஏழு நாட்கள், எட்டு நாட்கள், பதினோறு நாட்கள் நடத்தி இறுதியில் நீராட்டு விழாவினையும் சிறப்புறச் செய்தனர் என்பதற்கு நமக்குக் கிடைக்கும் இலக்கிய சான்றுகளும் கல்வெட்டுச் சான்று களும் ஏராளம். சித்திரைத் திருவிழா, வைகாசி விசாகம், ஆனி மூலம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், புரட்டாசி திருவோணம், ஐப்பசி விஷு, கார்த்திகை - கார்த்திகைத்தீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம்' தைப்பொங்கல், மாசிமகம், பங்குனி உத்திரம் எனப் பன்னிரண்டு நட்சத்திரங்களை மையமாகக் கொண்டு விழாக்கள் நடத்தினர்.

மாசிமகத் திருவிழாப் பற்றிய கல்வெட்டுச் செய்திகளைக் காண்பது இன்றைய தமிழக மக்கள் இவ்விழாவில் காட்டும் ஆர்வத்திற்கு ஒரு வரலாறு தரும் வகையில் அமைந்திடும். மாசித் திங்களில் மகம் நட்சத்திரம் கூடிய முழுமதிநாளில் கொண் டாடப்படும் விழா மாசிமகத் திருவிழா ஆகும். மாசித்திங்களில் வரும் மகத்தன்று சிவன் திருமால் திருமேனிகளை கடல், ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளுக்கு எழுந்தருள செய்து நீராட்டுவது தொன்மையான ஆகம மரபாகும்.

இறைவன் மட்டுமல்லாது மனிதர்களும் தங்களது பிறந்த நட்சத்திரத்தன்று புனித நீராட்டிக் கொள்வதை இன்று ஆகம முறைப்படி நிகழும் மணிவிழா போன்றவற்றில் காண்கிறோம். சங்ககாலந்தொட்டு இக்காலம் வரையிலும் கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியங்களில் நீராட்டுவிழா பற்றிய செய்திகள் நமக்கு நிறைய கிடைக்கின்றன. மங்கல நீராட்டுவிழா நீரணிவிழவு என்று சிலப்பதிகாரத்தில் பேசப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியின் ஆசிரியர்

மாங்குடி மருதனார் ''கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி ஆடுதுவன்று விழவின் நாடார்த்தன்றே'' என்று குறிப்பதன் மூலம் ஏழாம் நாள் இறுதியில் நீராடல் விழா அமைந்தது என்று அறிகின்றோம்.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கோக்கருநந்தடக்கன் எனும் ஆய்குல மன்னன் வழங்கிய செப்பேட்டில் திருமாலுக்கு விழாப்புறமாக ஏழுநாள் திருவிழாச் செய்து பங்குனி விசாகம் ஆறாடுவதாகவும் என்றுள்ள குறிப்பின் மூலமும் பூர்ணிமாந்த முறையிலான காலக்கணக்கீட்டின்படி மாசி மகத்துடன் முடிவடைகிற மாசி மாதத்திற்குப் பின்னர் வருகிற பங்குனி மாத விசாகத்தன்று ஏழாவது நாள் நீராடுதல் வழக்கில் இருந்தது தெரியவருகிறது. மாசி மகநீராடலை ''பிதுர் மாகஸ்நானம்'' என்று மகாபுராண அம்மானை கூறுகிறது. சங்ககாலப் பாண்டிய மன்னன் ''முந்நீர் விழாவின் நெடியோன்'' என்று அழைக்கப் படுவதை, ஒன்பதாவது புறநானூற்றுப் பாடலில் காணலாம். முந்நீர் என்பது கடல்நீர் என்று கருதப்படுகிறது. கடல், ஆறு குளம், ஆகியவற்றின் நீர் முந்நீர் என்று சொல்பவர்களும் உண்டு.

திருஞானசம்பந்தர் தனது மயிலாப்பூர் பதிகத்தில்,

''மடலார்ந்த தெங்கின் மயிலையர் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சுரம் அமர்ந்தான்''

என்று கபாலீசுவரரின் மாசிமகக் கடலாடு விழாவைத் தெளிவாகக் காட்டுகிறார். முதலாம் குலோத்துங்கனது (கி.பி. 1070-1126) தளபதி நரலோகவீரன், சிதம்பரம் கோயிலில் செய்த பணிகளையெல்லாம் அழகான தமிழ்ப்பாடல்களாகவும், சமஸ்கிருதச் சுலோகங்களாகவும் சிதம்பரம் நூற்றுக்கால் மண்டபத்து தூண்களில் கல்வெட்டாக பொறித்துள்ளான். அவற்றில் ஒரு பாடல்,

''மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
பேசவற்றைப் பெருவழியும் ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் திசையணைத்து
மண்புலியாணை நடக்கவைத்து''

என்பதாகும். இப்பாடல் மாசிக் கடலாடலையும், அதற்காக அவன் அமைத்த மண்டபம், பெருவழி ஆகியவற்றையும் எடுத்துச் சொல்கிறது.

திருச்செந்தூரில் இரண்டாம் வரகுண பாண்டியரின் (கி.பி. 862) மூன்று அதிகாரிகள் 1400 காசினை மூலதனமாக வைத்து அங்கு பல விழாக்கள் நடத்த வ்கை செய்துள்ளனர்.

அவற்றில் ஒரு விழாவாக மாசிமகம் குறிக்கப்பட்டுள்ளது. இதுவே கல்வெட்டுகளில் காணப்படும் தொன்மையான மாசிமக விழா எனலாம்.

முதலாம் இராசராசன் காலத்தில் (கி.பி. 1009), திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு மாசி மகத்தன்று பெருந்திருவமது படைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒன்றரை மா அளவு நிலம் நல்கப்பட்டு இரண்டு கல அரிசி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. இராசேந்திர சோழனின் 4-ஆம் ஆட்சி யாண்டில் (கி.பி. 1016) நாகப்பட்டினக் கூற்றத்து ஊரார்கள் இறைவனது மாசி மகவிழாவின் ஆறாம் நாள் செலவுகளுக்காக நிலமளித்த செய்தி அவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகிறது. விழாவின் ஒரு நாட்ச் செலவை, குறிப்பிட்ட ஊர் மக்கள் ஏற்றுச் செய்வதும் அதற்காக நிலம் ஒதுக்குவதும் பண்டைத் தமிழகத்தில் விழாக்கள் எந்த அளவு சிறப்பாகவும், அளவில் பெரியதாகவும், இடைவிடாதும் நிகழ்ந்தன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) ஏழு நாள் கொண்டாடப் பட்ட மாசித் திருநாளின் போது இறைவன் மோகனதேவருக்கு நாள் ஒன்றுக்கு பதின் கலமாக எழுபது கலம் நெல் தானமாக அளித்திடும் வகையில் பாலையூர் கிழவன் நாரணன் காடன் நிலம், தந்துள்ளான். மேலும் அவனே இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மாசி மகத்துக்கு இறைவனுக்கு பெருந்திருவமது படைத்திட வேண்டி இன்னும் கூடுதலாக நிலமளித்துள்ளான். மாசிமகவிழா சிவ பெருமானை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது. எனினும் திருவரங்கத்தில் கி.பி. 1531ஐச் சார்ந்த விஜயநகரர் காலக் கல்வெட்டு, உறையூர் அம்மனுக்கு மாசிமக விழா எடுத்த செய்தியைச் சொல்லுகிறது. இதனை "தம்முடைய கைங்கரியமாக உறையூர் வல்லிநாச்சியார் உத்ஸவபேரமும் எழுந்தருளுவித்து" "பெருமாள் கிருஷ்ணராயர் கட்டளையான மாசி எட்டாந் திருநாளில் எழுந்தருளும்படிக்கு உறையூர் நாச்சியார் தோப்பாக ராசவிபாடனால்க் குழி 450க்கும்", என்ற கல்வெட்டு வரிகளின் மூலம் தெளிகின்றோம்.

மாசி மகவிழாவின் போது தெய்வங்கள் நீராடுவதும் அதன் பிறகு அருகில் அமைக்கப்பட்ட மண்டபம், தோப்பு ஆகியவற்றில் காட்சி தருவதும் அத்தெய்வங்களுக்கு 'பெருந்திருவமிர்து' படையல்

படைக்கப்படுவதும் மரபு என்று மேற்சொன்ன கல்வெட்டுச் செய்திகள் விளக்குகின்றன. மேலும் இவ்விழாவின் போது பிராமணர்களுக்கு உணவளிப்பதும் சிறப்பாக நிகழ்ந்துள்ளது. குடுமியான்மலையில் உள்ள குலோத்துங்கன் மற்றும் பரகேசரி பட்டமுடைய மற்றொரு சோழ மன்னன் ஆகியோரது கல்வெட்டுக்கள் மாசி மகநாளில் பிராமணர்களுக்கும் மற்றும் பதினைந்து சிவனடியார்களுக்கும் (மாகேஸ்வரர்) உணவு வழங்க 15 கழஞ்சு பொன் முதலாக வழங்கப்பட்டதைக் கூறுகின்றன.

இதுபோலவே திருச்செங்கோட்டிலும் சோழர் காலத்தில் உத்தமன் கணவதி என்பான் 26 கழஞ்சு பொன் கொடுத்து மாசி மக நாளில் பிராமணர்களை உண்பிக்கச் செய்துள்ளான். இவ்வாறு இறைவன் தீர்த்தமாடல், வீதிவுலா, தேர் உலா வருகின்ற நிகழ்ச்சி ஆகியவை நெடுங்காலமாக நடைபெற்று இன்றும் பல இடங்களில் நிகழந்தும் வருகின்றன. மாசிமகவிழாவின் போது இறைவனுக்கு மட்டுமல்லாது. பிராமணர்களுக்கும், சிவனடியார் களுக்கும் உணவு வழங்கப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். கால வெள்ளத்தில் இவ்வழக்கு மெல்ல மறைந்த போதிலும் நாம் இன்று நலிந்தோருக்கு இவ்விழாநாளில் உணவளித்து பண்டைய விழாக் களின் நோக்கத்தை ஈடுசெய்வோமாக.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை ஆணையர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ. ஆ.ப.,
அவர்கள் சார்பாக முனைவர் சு. இராசகோபால், கல்வெட்டாய்வாளரால்
வெளியிடப்பெற்றது.